பொதுசன நூலகம் மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 11 புதன்கிழமை (23.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126




## ஆணைவிழுந்தானில் கிளைமோர் பொதுமக்கள் இருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரி, ஆணைவிழுந்தான் பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணி நேற்று அதிகாலை நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் லொறியில் சென்ற இரு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

பூநகரி–அக்கராயன் வீதியில் பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த லொறியை இலக்கு வைத்து நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் லொறியில் சென்று கொண்டிருந்த இரு பொதுமக்கள் காயமடைந்தனர். பூநகரியை சேர்ந்தவர்களான குழந்தைவேலு எழில் மேகவர்ணன் மற்றும் கந்தையா தர்மஜெயந்தன் ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.(ச–5)

## முகமாலையில் மோதல் டாங்கி முற்றாக அழிப்பு

### விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யாழ்.வடபோர் முனையான முகமாலை களமுனையில் இராணுவ கவசப் படை கொமாண்டோக்களின் முன்னகர்வைத் தமிழீழ விடுதலைப்புலிகள் முறியடித்துள்ளனர்.

இம் முறியடிப்புத் தாக்குதலில் கவசப் படை டாங்கி ஒன்று முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. எழுதுமட்டுவாளில் மோட்டார்த் தளமொன்றும் தாக்குதலுக்குள்ளாகி எரிந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# பரிந்துரைகள் - ஆலோசனைகளை அரசு அமுல்படுத்தத் தவறியுள்ளது

## சுயாதீன ஆணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் கவனத்தில் எடுத்து அதனை உரிய முறையில் அமுல்படுத்த அரசாங்கம் தவறியுள்ளது என்று இந்திய உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி.என்.பகவதி தலைமையிலான சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.** *(10 ஆம் பக்கம் பார்க்க)*



**அருட்தந்தையர்கள், பொதுமக்கள் சூழ கருணாரட்ணம் அடிகளாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.**

## இலங்கை சமாதான முயற்சிகளில் அனுசரணை வழங்கும் திட்டமில்லை

### இந்தியா தெரிவிப்பு

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் அனுசரணையாளர்களாக பணியாற்றுவது குறித்து இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கவில்லையென இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு விடயத்தில் இந்தியா அனுசரணையாளர்களாக பணியாற்ற வேண்டுமென இந்தியாவின் அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டு வருகின்ற போதும் உயர்மட்ட அதிகாரிகள் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லையென பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்திய அதிகாரிகள் தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்ற போதும் எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைகளுக்கு இந்தியா ஏற்கனவே உதவிகளை வழங்கியுள்ள போதும் தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

### உள்ளே...

சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?




## கருணாரட்ணம் அடிகளாரின் கொலைக்கு நோர்வே அரசாங்கம் கடும் கண்டனம்

(ஒஸ்லோ)

வடக்கு–கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளார் படுகொலை செய்யப்பட்டமைக்கு நோர்வே கண்டனம் தெரிவித்துள்ளது. தலைநகர் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் நேற்று வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

வடக்கு–கிழக்கு மனித உரிமைகள் செயலகமான நிசோரின் தலைவர் எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளார் பயணித்து கொண்டிருந்த வாகனத்தை இலக்குவைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இப்படுகொலையை நோர்வே கண்டனம் செய்கிறது. இத்தகைய படுகொலைகளால் இலங்கையில் தொடர்ந்து வரும் இன மோதலில் பலியாகும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கருணாரட்ணம் அடிகளாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறோம் என்று நோர்வேயின் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

## சர்வதேசப் பிரதிநிதிகள் குழு விலகினாலும் ஜனாதிபதி ஆணைக்குழு செயற்படும்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின்பேரில் இலங்கை வந்த சர்வதேசப் பிரமுகர்கள் குழு, தமது பொறுப்பிலிருந்து நீங்கினாலும், நீங்காவிட்டாலும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள வானிலை அவதான நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது, மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# பால்மா விலை அதிகரிக்காது அமைச்சர் பந்துல அறிவிப்பு

(கொழும்பு)

பால்மாவின் விலையை அரசாங்கம் எக்காரணம் கொண்டும் அதிகரிக்கமாட்டாதென வர்த்தக சந்தை அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பால்மா இறக்குமதிக் கம்பனிகள் அரசாங்கத்துடன் செய்து கொண்டுள்ள ஆறு மாத உடன்படிக்கை இம்மாதம் 30ஆம் திகதி முடிவுக்கு வருகிறது.

இது குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

அரசாங்கம் கடந்த 6 மாத காலப் பகுதியில் பால்மா இறக்குமதிக்கு விதித்திருந்த வரிகளை மிகவும் குறைத்துள்ளது.

ஒரு கிலோ பால்மாவுக்கு ஆரம்பத்தில் விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா வரியை ஐந்து ரூபா வரை குறைத்துள்ளது.

அரசாங்கம் நுகர்வோரின் நலன்களை பேணுவதிலேயே அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

கம்பனிகளின் பிரச்சினைக்ளை கலந்துரையாடல்களின் மூலம் தீர்ப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ச-2)

# க.பொ.த (சா/த) பெறுபேறு

**உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.**

அ.பிரதீபா (5ஏ,3பி,சி,எஸ்); சி.சிவானி (5ஏ,5பி); த.நித்தியா (3ஏ,4சி,எஸ்); யோ. வேணிகா (2ஏ,பி,3சி,4எஸ்); சோ.சுகந்தினி (2ஏ,2பி,2சி,2எஸ்).

த.சுபாசினி (ஏ,3பி,2சி,எஸ்); செ.கிருபசாந்தன் (ஏ,பி,4சி,3எஸ்); மா.புகனேந்தினி (ஏ,2பி,2சி,2எஸ்); க.ரேவதி (ஏ,3பி,சி,4எஸ்); கு.சாரதா (ஏ,3சி,4எஸ்).

(ச)

# புத்தகக் கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகரசபையினால் நடாத்தப்படும் புத்தகக் கண்காட்சி நகரசபை நவீன சந்தைக் கட்டடத்தில் இன்று 23ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் கு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்புத்தக கண்காட்சி ஆரம்ப விழாவில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு புத்தக கண்காட்சியை திறந்து வைக்கவுள்ளார்.

(ச-52)

# சாயி அமிர்தம்



துளி-06

23.04.2008

**இராமர் பாலத்திறப்பு விழாவில் நடந்தது என்ன?**

**சாயி பகவானின் விளக்கம்**

திரேதா யுகத்தில் இராமர் சுக்ரீவனை இலங்கைக்கு பாலம் கட்டச் சொன்னார். அதன்படி பாலம் கட்டப்பட்டது. பாலத்தில் ஒரு பெரிய இடைவெளி வைக்கப்பட்டது. சுக்ரீவனும் அணை கட்டுவல்லுனர்களும் அந்த இடைவெளியை மலையால் மூடுவதா அல்லது பாறைகளால் மூடுவதா என்று விவாதித்துக் கொண்டு இருப்பதை அனுமன் கண்டார்.

ஸ்ரீராமன் இலட்சுமணனுடன் முகூர்த்தவேளையில் பாலத்தினருகில் வந்து சுக்ரீவனின் படையாட்கள் மூலம் கடைசிக்கல்லை வைத்து பாலத்தை சீர் செய்ய தயாரானார், அப்போது அனுமன் ஒரு மலையுடன் அங்கு வந்தார். அதற்கு இராமர் முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டதாகவும், மலையை வடதிசை நோக்கி எறியும் படியும் கூறினார். அவ்வாறே அனுமன் மலையை வடதிசை நோக்கி எறிந்தார்.

அதுவே பிற்காலத்தில் துவாபரயுகத்தில் கோவர்த்தனகிரி என்று அழைக்கப்பட்டது.

பிருந்தாவன மக்களை மழையில் இருந்து காப்பாற்ற மலையையே ஒருவாரகாலம் தூக்கி வைத்திருந்து ஆசி வழங்கினார் கிருஷ்ணர்.

தெய்வீக வரலாறுகளைப் படித்தால் பாவங்கள் தொலைந்து மனதுக்கு அமைதி வரும். இன்று தெய்வமே சாயி அவதாரம் எடுத்து வரலாறுகளை எதுவித மாற்றமும் இல்லாமல் அப்படியே தருகிறார். அடியார்கள் படித்து பரவசமடையுமாறு அழைக்கின்றோம்.

ஜெய்சாயிராம்

திருவருள் நற்பணி மன்றம், தொண்டமானாறு.

(1060)

# தமிழரின் விடுதலைக்காக ஆன்மிகப் பணியை பயன்படுத்தியவர் கருணாரட்ணம் அடிகளார்

## அஞ்சலி உரையில் பா.நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

ஆன்மிக பணியை தமிழ் மக்களின் விடுதலைக்காக பயன்படுத்தியவராக கருணாரட்ணம் அடிகளார் விளங்கினார் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

கருணாரட்ணம் அடிகளாரின் இறுதி வணக்க நிகழ்வு கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் ஆற்றிய இறுதி வணக்க உரையில் தெரிவித்திருப்பதாவது,

ஆன்மிக பணியை விடுதலைக்காக பயன்படுத்தியவராக கருணாரட்ணம் அடிகளார் விளங்கினார். தமிழ் மக்களின் அவலங்களை சர்வதேச சமூகத்தின் முன் எடுத்துச் சென்றவர் என்ற வகையில் அரசு கருணாரட்ணம் அடிகளாரை கிளைமோர்த் தாக்குதல் மூலம் படுகொலை செய்துள்ளது. அரசு புரிந்துவரும் மனித உரிமை மீறல்களை வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகம் ஊடாக சர்வதேச சமூகத்தின் முன்னெடுத்து செல்வதில் கருணாரட்ணம் அடிகளார் பெரும் பங்காற்றினார்.

யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் மக்கள் பேரவலத்தை சுமந்து நின்ற நேரத்தில் மக்களின் துயர் துடைப்பதில் பெரும் பங்காற்றினார்.

வெரித்தாஸ் வானொலி ஊடாக தமிழர்களின் அவலங்களை சர்வதேச நாடுகளுக்கு எடுத்துச்செல்வதில் கருணாரட்ணம் அடிகளார் சிறப்புடன் பணியாற்றினார்.

இதன் காரணமாக ஒரு ஆன்மிக பணியை புரிகின்றவர். தனது சக்திக்கு அப்பால் துயர் சுமந்து நின்ற தமிழ் மக்களின் அவலங்களை வெளியுலகிற்கு கொண்டு செல்வதில் பெரும் பங்காற்றினார்.

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருந்த கொடூர போரையும் அதனால் எழுந்த மனித அவலங்களையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்வதில் பெரும் பங்கு வகித்தார். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் காலத்தில் விடுதலை பெற வேண்டும் என்ற பேரவா சுமந்தவராக கருணாரட்ணம் அடிகளார் விளங்கி வந்தார்.

அரசின் மனித உரிமை மீறல்கள் கருணாரட்ணம் அடிகளார் ஊடாக அனைத்துலக சமூகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாக கருணாரட்ணம் அடிகளாரை படுகொலை



செய்யவேண்டும் என்ற முடிவுக்கு அரசு வந்தது. அதனை நிறைவேற்றியும் உள்ளது என்றார் பா.நடேசன்.

(ச-5)

# 10 கோடி ரூபா பெறுமதியான மருந்து இன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகளின் அவசர தேவையின் நிமிர்த்தம் பத்துக் கோடி ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த மருந்துப் பொருட்கள் இன்று கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படுமென அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவப் பொருட்களில் 504 மருந்துக் கூறுகள் அடங்குவதாக கூறப்பட்டுள்ளது.

(ச-2)

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உயர் அதிகாரிகள் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உயர் அதிகாரிகள் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளுக்கு இன்று புதன்கிழமை காலை முக்கிய விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலிக்கு வரும் மேற்படி அதிகாரிகள் இன்று காலை 10 மணியளவில் குறித்த பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை சந்தித்து அப் பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் நலன்கள் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பாடசாலைகள் முன்னேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள 9 ஆயிரத்து 800 பாடசாலைகளில் தேசிய ரீதியில் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு துறைசார் அபிவிருத்தி ப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைய யாழ் மாவட்டத்தில் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

(ச-49)

# செல்வப் புதல்வனின் பத்தாமாண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 24 08 1981



விண்ணுலகில் 23 04 1998

## குமரகுரு கவாஸ்கர்

பத்துமாதம் சுமந்து பெற்ற கவாஸ்கர்
பரமனடி சேர்ந்து பத்தாண்டு ஆனதுவோ?
பாருலகில் உன் நினைவு என்றும் மாறாது
பர உலகில் உன்னை முகமுகமாய் காணும் வரை...

சரோஜ் மகால்
240,நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

அப்பா –ச.குமரகுரு
அம்மா –கு.சூரியபகவதி

(1110)

# வெள்ளைப் பச்சை அரிசி 10 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் வெள்ளைப்பச்சை அரிசியின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துலகுணவர்த்ன தெரிவித்துள்ளார்.

அரிசிக்கு அரசாங்கம் விதித்துள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையை ரத்து செய்துள்ளது. ஒரு கிலோ வெள்ளைப்பச்சைக்கான அதிகபட்ச சில்லறை விலை 65 ரூபாவாக அதிகரித்துள்ளது என்றார்.

(ச-2)

# வயோதிபரின் சடலத்தை பொறுப்பேற்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த மண்கும்பானைச் சேர்ந்த சின்னையா சிவராசா (வயது 70) என்பவர் மரணமடைந்துள்ளார்.

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அவரின் சடலத்தை உறவினர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளு மாறு வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் அறிவித்துள்ளார். இவ் வயோதிபர் கடந்த 30 வருடகாலமாக சந்நிதியில் வசித்து வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(ச)

# பணிப்பாளரை சந்திக்கவும்

எச்.என்.டி.ஏ I,II,III; எச்.என்.டி.சி I,II,III; எச்.என்.டி.எம் I,II,III; என்.டி.பி.எஸ்I; என்.டி.ஈ I ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்ற ஏற்கனவே விண்ணப்பித்த, விண்ணப்பிக்க வேண்டிய அனைத்து மாணவர்களும் அத்துடன் எச். என். டி.எம். 3-ம் (2007) வருட செயற்திட்டம் சமர்ப்பிக்க வேண்டிய மாணவர்களும் 24ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளரை நிறுவன அலுவலகத்தில் சந்திக்கவும். இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வழங்கப்படும் இறுதிச் சந்தர்ப்பம் இது என்பதுடன் பரீட்சைக் கட்டணம் ஒரு பாடத்திற்கு 300 ரூபா செலுத்த வேண்டுமெனபணிப்பாளர்ஆர்.ஏ.திலகரட்ணம் தெரிவித்துள்ளார்.

(ச)

# இன்று ஒரு தகவல்

## உழைப்பின் பெருமை

ஓர் எழுத்தாளர் தனது வீட்டில் உட்கார்ந்து நீண்ட நேரம் எழுதுவார். எழுதுகிறநேரம் போக மற்ற நேரங்களில் தமது சொந்த வயல்களில் வேலை செய்வார். அது முடிந்ததும் அருகில் இருக்கும் புகைவண்டி நிலையத்துக்குப் போவார்.. கொஞ்ச நேரம் காலாற நடப்பார். இது அவரது அன்றாட வழக்கம்.

அன்றும் வழமை போல புகையிரத நிலையத்தில் நடந்து கொண்டிருந்தார். அந்த நேரம் அங்கே நடை மேடையில் நின்று கொண்டிருந்த ஓர் அம்மையார் இவரைக் கைதட்டிக் கூப்பிட்டார். 'ஐயா ! நானும் என் வீட்டுக்காரரும் இங்கே வந்தோம். அதோ அந்த ரயிலிலே ஏறி நாங்கள் ஊருக்குப் போக வேண்டும். எனது வீட்டுக்காரர் அதோ அந்த உணவு விடுதிக்குப் போயிருக்கிறார். இன்னமும் வர வில்லை . ரயில் புறப்பட்டு விடும் போல இருக்கிறது. நீங்கள் அங்கே சென்று அவரை அழைத்து வருவீர்களா ?' என்று கேட்டார். இவரும் 'சரி' என்றார்.

உடனே அந்த அம்மையார் கணவருடைய அடையாளங்களைச் சொன்னார். அவர் சொன்னதை இவர் கவனமாகக் கேட்டுக்கொண்டார். 'நீங்கள் அவரை அழைத்து வாருங்கள்; உங்களது கூலியைக் கொடுத்து விடுகிறேன்' என்றார் அம்மையார். இவர் போய், அந்த அம்மாள் சொன்ன அடையாளங்களை வைத்து அவரது வீட்டுக்காரரைக் கூட்டி வந்தார். அம்மையாரும் தான் கூறியபடி அவருடைய கூலியைச் கொடுத்தார். அவரும் மறுப்பு எதுவும் சொல்லாமல் அதனை வாங்கிக் கொண்டார்.

அந்த நேரம் எதிரே வந்து கொண்டிருந்த ஒருவர் அவரை அடையாளம் கண்டு கொண்டார். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டது அந்த அம்மையாரின் காதில் விழுந்தது அப்பொழுது தான் அவருக்குப் புரிந்தது இவரிடம் கூலி வாங்கியவர்தான் பேரறிஞர் லியோ டால்ஸ்டாய் என்பது!

ரஷ்ய நாட்டின் மிகப் பெரிய ஞானி அவர். சோவியத் நாட்டின் ஈடு இணையற்ற இலக்கிய மேதை . 'ஐயா !உங்களையா கூலியாளாக நினைத்தேன் . உங்களுக்கா கூலி கொடுத்தேன்! பெரிய தவறு செய்துவிட்டேன். என்று அந்த அம்மையார் வருத்தப்பட்டார்' பரவாயில்லை! ஆனால் நீங்கள் எனக்குக் கொடுத்த கூலிப்பணத்தை நான் திரும்பத்தர மாட்டேன். ஏன்தெரியுமா ? அது நான் உழைத்து சம்பாதித்த பணம் என்றார் டால்ஸ்டாய். எவருக்குமே அதிக மகிழ்ச்சியைத் தரும் பணம் எது வென்றால் அது இவர்கள் உழைப்புக்கு ஊதியமாகக் கிடைக்கும் பணம் தான் ! நமது ஆட்க ளில் சிலருக்கு உழைக்காமல் தீய வழியில் வரும் பணம் கூட மகிழ்ச்சியைக் கொடுக்கும் !

ஒரு பெரிய தொழிற்சாலை . அதன் முதலாளி கடுமையான ஒரு கட்டுப்பாடு விதித்திருந்தார். உள்ளே யாரும் சிகரெட் பிடிக்கக்கூடாது என்பது தான் அந்தக் கட்டுப்பாடு . ! ஒரு நாள் முதலாளி தொழிற்சாலையை சுற்றி பார்த்துக் கொண்டு வருகிறார். அப்பொழுது உள்ளே ஓர் இளைஞன் சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான் அதைப் பார்த்ததும் முதலாளிக்கு கோபம் வந்து விடுகிறது. உடனே உதவியாளரைக் கூப்பிடுகிறார். 'அதோ பார் .... அவன் சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான் . அவன் கணக்கை முடித்து அவனை உடனே வெளியே அனுப்பிவிடு என உத்தரவு போடுகிறார். அதன் படியே, உதவியாளர் அவனை உள்ளே அழைத்துப் போய் சம்பள பாக்கி மற்ற உதவித்தொகை எல்லாவற்றையும் மொத்தமாக அவன் கையில் கொடுத்து வெளியே அனுப்பி விடுகிறார்.

பணத்தோடு வெளியே வந்த அவன் ஏதோ யோசித்தபடி நின்று கொண்டிருந்தான். என்ன யோசிக்கிறாய்? என எதிரே வந்த ஒருவர் கேட்டார்.

ஒன்று மில்லை என்னுடைய நண்பன் ஒருவனைப் பார்ப்பதற்காக உள்ளே போனேன் என்னுடைய பெயர் என்ன வென்று கேட்டு விட்டு 50 ஆயிரம் ரூபா பணத்தைக் கையில் கொடுத்து வெளியே அனுப்பிவிட்டார்கள். அது தான் ஏன்? என்று யோசிக்கிறேன் என்றான் அவன்!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## நாடாளுமன்றத்தில் கட்சிமாறலில் சாதனை

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்தில் மாற்றுக் குழு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பக்கம் சென்றுள்ளனர்.

விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் சுயாதீனமாக செயல்பட முடிவுசெய்துள்ளனர். இதுதவிர ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து வெளியேறியுள்ளன. முன்னதாக அரசாங்கத்திற்கு ஆதரவளித்த முஸ்லிம் காங்கிரஸ் தற்போது மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துள்ளது. வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவில் கட்சிமாறல்கள் இம்முறை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-5)

# தீர்க்க தரிசனம் உடையவரே சிறந்த தலைவராவார்

சிறந்த வல்லுநர் புதுமையாக செயல் திறன் படைத்தல் , சரியான தீர்மானம் எடுத்தல் இவையாவும் சுவாமி விவேகானந்தரில் காணப்பட்ட சிறப்பு அம்சங்களாகும். கருத்துக்களை தெளிவாக மற்றவர் புரியும்படி எடுத்துரைத்து அதனை எப்படி செயற்படுத்துவது என்பது சுவாமி விவேகானந்தரின் நடைமுறை. மற்றவர்களை தம்மைப்போல் உயர்ந்த சிந்தனையாளராக ஆக்கி அவற்றை செயற்படுத்துவதற்கு உரிய திட்டங்களை அமைத்தார். இப்படி செயற்பட்டுக் கொண்டு போகும் பொழுது நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவது சகஜம். இதனையும் எப்படிக்கையாள வேண்டும். உயர்ந்த தீர்க்க தரிசனம் உடையவரே சிறந்த தலைவர் என்பது சுவாமி விவேகானந்தரின் ஆழமான கருத்து.

இவ்வாறு இம் மாதம் நான்காம் திகதி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தன் தலைமையில் இடம் பெற்ற சுவாமி விவேகானந்தரின் ஆளுமை பற்றிய கருத்தரங்கில் பருத்தித் துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித் ரூபானந்தா கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், பெயர், புகழ் , சுயநலநோக்கு உள்ளவர்கள் சிறந்த தலைவர்களாக வரும் வாய்ப்பு இருக்காது. இவர்கள் எல்லா மக்களையும் ஒரு குடைக்கீழ் அரவணைக்கும் பண்பு எள்ளளவும் பெறமாட்டார்கள் கீழ் தரப்படுபவையாவும் தலைமைத்துவத்திற்கு முக்கியமானவை என்பது சுவாமி விவேகானந்தரின் கருத் தாகும்.

* நேர்மையான வாழ்வு ,
* விவேகம் அல்லது சூட்சும புத்தி ,
* கடின உழைப்புக்குரிய மனோபாவம்
* சிறிய செயலை புகழ்ந்துரைத்தல் அதனால் செயல் புரிபவரை மேலும் சிறப்பாக செயல் புரியும் உந்து சக்தி அளித்தல்
* கட்டமைப்பு
* உலகளாவிய செயல்திறன்

ஒழுக்க சீலராக இருப்பவரின் வாழ்வு பலருக்கு இவரைப் பின்பற்றி வாழத்தூண்டும். குறிப்பாக ஸ்ரீ ராம கிருஷ்ணரின் சத்திய வாழ்வும் வாக்கும் இன்று உலகெங்கும் மூலை முடுக்கெல்லாம் ப்ரவி பெரும்பாலும் அமெரிக்க, இங்கிலாந்து, சீனா பிறேசில், ஜெர்மன், அவுஸ்திரேலியா போன்ற பல நாட்டு மக்களால் கவரப்பட்டு தங்கள் வாழ்க்கை முறையாக மாற்றிக் கொண்டு விட்டார்கள். விவேகமாகச் சிந்தித்து அதனைச் செயற்படுத்த திட்டங்களை வகுப்பவர் சிறந்த தலைவர். இவர் தன்னலமற்றவராக சகோதர மனப் பான்மை உடையவராகவும் அன்பின் சிகரமாகவும் இருத்தல் மிகவும் அவசியம் என்றார்.

### கடின உழைப்பு

கடின உழைப்பு நிகர் சுவாமி விவேகானந்தர். தமது 39 வயதுக்குள் இந்தியா முழுவதும் கால் நடையாகச் சென்று உலகெங்கும் பின்பு சென்று மக்களின் வாழ்க்கை நிலையை நேரிடையாக கலந்தும், வாழ்ந்தும் வந்தார். அவர் கடினமாக உழைத்த காரணத்தால் 40 வயது எட்ட முன்பு நம்மை விட்டு உயிர் நீத் தார். 39 வயதில் 4 ஆயிரம் ஆண் டுகள் வாழ்ந்த ஒருவரின் விவேகம் உடை யவராக திகழ்ந்ததாக சான்றுகள் உண்டு. இவர் விட்டுச் சென்ற கடிதங் கள்,. சொற்பொழிவுகள், வேலைத் திட்டங்கள் ஆங்கிலத்தில் 9 தொகுப்பாக வெளிவந்துள்ளன. முக்கியமாக மேலை



நாடுகளின் முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்த கட் டமைப்பு(Power of organization) இவரை முற்றாக ஈர்த்தது. இதனைச் செயற் படுத்துவதே ராமகிருஷ்ண சங்கம், மடம் இரண்டையும் நிறுவினார். இன்று பலராலும் எடுத்து இயம் ப்படும் உலகளாவிய செயல் (Glo balization) இதனை சுவாமி விவேகானந் தர் 1894 ஆம்ஆண்டிலே செயல் வடிவம் கொடுத்தார். சுவாமி விவேகானந்தர் தனது வாழ் நாளில் உலகெங்கும் உள்ளவர்களை சகோதர சகோதரிகளாக பார்த்தவர். மனித நேயம் படைத்தவரையும் உயர்ந்த தலைமைப் பண்புள்ளவரையும் நாம் மறக்க வாய்ப்பில்லை. ஓ

# சட்டம் ஒழுங்குகளைச் சீரழிக்க எவருக்கும் அனுமதி அளிக்கக்கூடாது

## பரு.மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் உரை

(பருத்தித்துறை)

'சட்டமும் ஒழுங்கும் நிலை நிறுத்தப்பட வேண்டும். சட்டம் ஒழுங்குகளைச் சீர்குலைக்க எவரும் அனுமதி யளிக்கக்கூடாது. சட்டம் ஒழுங்குகளை மீறுதல், இலஞ்ச ஊழல்களைப் புரிதல், சமூகச் சீரழிவுகளில் ஈடுபடுதற் குற்றங்களுக்குக் கடுந்தண்டனை வழங்க சட்டத்தில் இடமுண்டு. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தி மக்களைப் பாதுகாக்க நீதிமன் றங்கள் நடவடிக்கை எடுக்கும்' இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் , சட்டத்தையும் ஒழுங் கையும் நிலைநாட்டி ஊழல் ஒழுங்கினங்களைத் தடுப்பது சம்பந்தமாக அர சாங்க உத்தியோகத்தர்களுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

பருத்தித்துறை நீதி நிர்வாகப் பிரதேசத்தில் குற்றச் செயல்கள் , சட்ட விரோதச் செயல்கள் சமூகச் சீரழிவுகள் கட்டுப்படுத்த ப்பட்டுள்ளன. இந் நிலை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். குற்றச் செயல்கள் சட்டவிரோத ச் செயல்கள் சமூகச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க அலுவலகங்கள் மக்களுக்காகவே இயங்குகின்றன. இவ் அரசாங்க அலுவலகங்களில் எது வித வேறுபாடுகளுமின்றி மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அரசாங்க அலுவலகங்களில் முறைகேடுகள், ஊழல்கள் இடம் பெறக் கூடாது. அரசாங்க உத்தியோகத்தர் கள் நீதியுடனும் நேர்மையுடனும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்.

மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வாழ்ந்து வருகின்றனர் இவர் களுக்கு உதவ வேண்டியது மனி தாபிமான செயலாகும். அவர்க ளின் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்த தப்பட வேண்டும்.

வடமராட்சியில் ஒரு சில அலுவலகங்களில் முறைகேடுகள், பாரபட்சங்கள், ஊழல்கள் நிலவுவதாக முறைப்பாடுகள் இருக்கின்றன. இம்முறைப்பாடுகள் நீதி மன்றத்திற்கு கொண்டுவரப்படுகின்றன மக்கள் நீதி மன்றத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையினாலேயே நீதிமன்றத்திற்கு வருகின்றனர். மக்களின் இந் நம்பிக்கையைப் பேண வேண்டியது நீதிமன்றத்தின் பொறுப்பாகும். இச் செயற்பாடுகள் நீதிமன்றத்தின் வேலைப் பழுவை அதிகரித்து வருவதையும் கருத் திற்கொள்ள வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியது நீதி மன்றத்தின் தலையாய கடமையாகவும் உள்ளது.

அதிகாரிகள் பொறுப்புக்களை உணர்ந்து நீதியுடனும் நேர்மையுடனும் மனிதாபிமான முறையில் சேவை யாற்ற வேண்டும். பொறுப்பற்ற முறையில் தான்தோன்றித்தனமாக செயற்படுவது தண்டனைக் குரிய குற்றமாகும் . இதிலிருந்து உத்தியோகத்தர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். கடமைகளை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இதற்கு நீதி மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடமராட்சி கல்வித் திணைக்களத் தின் முறைகேடுகள் ஊழல்கள் மனித உரிமைமீறல்கள் பற்றி மக்கள் நீதி மன்றத்திற்கு முறைப்பாடுகள் செய்து வருகின்றனர். முறைப்பாடுகள் தொடர்ந்த வண்ணமே யிருக்கின் றன. இது கவலைக்கும் வேதனைக்கு முரியதாகும். கல்வி உயர் அதிகாரி கள் இக்குற்றச்சாட்டுக்கள் பற்றி ஏன் நட வடிக்கை எடுக்கவில்லை . இதனால் மக்கள் பலத்த பாதிப்படைந்துள்ளனர். தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் குளறுபடிகள் என பாதிக்கப்பட்ட தொண் டர் ஆசிரியர்கள் பலத்த முறைப்பாடுகள் செய்துள்ள னர். இதற்கு எதிராக மக்கள் ஆர்ப் பாட்டம் நடாத்தப்போவதாகவும் தக வல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான நிலையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி கட்டுப்பாட்டை ஏற்படுது வது எவ்வாறு இது பொலிசாருக்கு ம் நீதிமன்றத்திற்கும் தலையிடியை ஏற்படுத்துகின்றது. பொது அமை திக்கும் பங்கம் ஏற்பட ஏதுவாகின்றது.

கல்வியில் முன்னணியில் திகழ்ந்த இப்பிரதேசத்தில் இந்நிலை ஏற்பட காரணமென்ன? இந்நிலை தொடருமாயின் எதிர்காலச் சந்ததியினர் பாதிக்கப்பட்டு சமூகம் சீரழிவை எதிர் நோக்க வேண்டிய அவலநிலை ஏற்படும். கல்விமான்கள், சமூகப் பற்றுள்ளவர்கள் இந் நிலைகளுக்கு இடமளிக்கக்கூடாது. இந் நிலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

கிராமங்களில் பல்வேறு அபிவிருத்திகளிலும் எது வித வேறுபாடு களுமின்றி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். சட்டவிரோத மணல் கடத்தல், மரங்கள் அழிப்பு, கசிப்பு விற்பனை பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறுதல், திருட்டு மின் பாவனை , சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்து வருவதாக முறைப்பாடுகள் உள்ளன. இக்குற்றச் செயல்கள் மீது அதிகாரிகள் அதிக அக்கறை யுடன் செயற்பட வேண்டும். கடமை களை உதாசீனம் செய்யும் நிலைமைகள் தண்டனைக் குரிய குற்ற மாகவே கொள்ளப்படும். கிராம சேவை உத்தியோகத்தர்கள் மிகச் சிறப்பாக செயற்பட வேண்டும். எனக்குறிப்பிட்டார். இந் நிகழ் வில் பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜே. எச். கே.லியனகேயும் உரையாற்றினார்.

மேலதிக மாவட்ட நீதிபதி வே. ஜி அலெக்ஸ்ராஜா வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ சுமித் நிஸங்க , நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச். எம். ஜேஹேரத் , பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். பி. எஸ் பண்டார ஆகியோரும் இக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர். (அ-52)

## நூலகங்களிற்கான நூல்களின் பட்டியல்

(யாழ்ப்பாணம்)

நூலக விழிப்புணர்வு நிறுவகம் சர்வ தேச புத்தக தினத்தை முன்னிட்டு பொது நூல கங்கள் ,சனசமூக நிலையங்கள் என்பவற் றில் சேர்க்கக்கூடிய அடிப்படை நூல்களின் பட்டியல் ஒன்றை தயாரித்து வெளியிடவுள் ளது.

இப்பட்டியல் அறிவை வளர்க்க வேண் டிய நூலகங்கள் யாவற்றிலும் அவசியமாக இருக்க வேண்டிய நூல்களின் விபரங்களை உள்ளடக்கியுள்ளது. இது ஒரு ஆரம்ப நிலைப் பட்டியலாகும். தொடர்ந்தும் புதிய நூல்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டு மேலும் அபி விருத்தி செய்யப்படும் . தேவைப்படும் நூலகங்கள் நூலகவிழிப் புணர்வு நிறுவகத் துடன் தொடர்பு கொண்டு பட்டியலைப் பெற் றுக்கொள்ளலாம் என நிறுவகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

## யாழ்.செய்திகள்

## சீட்டிழுப்பு பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக உத்தியோ கத்தர் நலன்புரி சங்க வளர்ச்சி நிதிக்கான மாபெரும் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு பிற் போடப் பட்டுள்ளதாக பிரதேச செயலர் பி. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

இ வ் சீட்டிழுப்பானது எதிர்வரும் யூலை 15 ஆம் திகதி இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் . கடந்த 15 ஆம் திகதிநடைபெறவிருக்கும் சீட்டிழுப்பு இது தொடர் பான சில வேலைகள் பூர்த்தியடைய தாமத மாகிய காரணத்தால் நடைபெறவில்லை யென பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (அ-3,4)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம் சைவ கலை பண்பாட்டுப் பேரவை யினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் சித்திரை மாத வெளியீடு 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப 10.30 மணியளவில் வெளி யிடப்படும். இதன் வெளியீட்டுரையை கலா நிதி வி.பாலகிருஷ்ணனும் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் திருமதி. தவமலர் சுரேந் திரநாதனும் வழங்குவார்கள். (அ-35)

## ஆன்மீக நிகழ்வுகள்

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 27 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் கரணவாய் மகா வித்தியாலய மாணவர் களின் பண்ணிசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (அ-35)

# குறிகாட்டுவான் இறங்குதுறை வெகுவிரைவில் திருத்தப்படும்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், குறிகாட்டுவான் இறங்கு துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இறங்குதுறை கடந்த50 ஆண்டுகளாக புனரமைக்கப் பட வில்லை. இது கடலில் அமிழும் அபாயத்தை எதிர்கொள்கிறது.

புதிய திட்டத்தின் கீழ் இறங்கு துறையை யும், அதனை அண்டிய வீதிகளும் புனர மைக்கப்படும். இதற்காக தேச நிர்மாண உட் கட்டமைப்பு அமைச்சு வீதி அபிவிருத்தி அதி காரசபைக்கு ஒன்றரைக்கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

சீமெந்து விலை பற்றிய பிரச்சனை தீர்க் கப்பட்டதும், புனரமைப்பு வேலைகள் ஆரம்ப மாகு மென யாழ் .மாவட்ட வீதி அபிவிருத்தி அதி கார சபை தெரிவித்துள்ளது. (அ-7)

## பிரதிஷ்டா கிரியையும் மஹோற்சவமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் நாளைவியாழக்கிழமை பிரதிஷ்டா கிரியைகள் நண்பகல் 11. 30 தொடக்கம் 12 .30 வரை நடைபெறும். அதே தினம் பிற்பகல் 4மணிக்கு மஹோற்சவ பூர்வாங்க கிரியை கள் இடம் பெறும்.

மஹோற்சவம் நாளை மறுநாள் வெள்ளிக் கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மே மாதம் 6 ஆம் திகதி பூங்கா வன உற்சவத்துடன் நிறைவடையும்

ஏப்ரல்29 ஆம் , 30 ஆம் திகதிகளில் முறையே மாம்பழத் திருவிழா, சிவலிங்க கைலாயக்காட்சி என்பனவும் மே மாதம் 2 ,3, 4, 5 ஆம்திகதிகளில் முறையே வேட்டை, சப் பரம், தேர், தீர்த்தம் என்பனவும் இடம் பெறும் . தினமும் காலை 9.30 மணிக்கும் மாலை 4. 30 மணிக்கும் வசந்த மண்டப பூசை இடம் பெற்று தொடர்ந்து சுவாமி வீதியுலா இடம் பெறும் . (ஓ)

## நல்லூர் பிரதேச செயலக உலக புவிதின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரதேச காணி பயன்பாட்டு திட்டமிடல் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட உலக புவிதினம் நேற்று செவ்வாய் நல்லூர் பிரதேச சபை கொக்கு வில் உப அலுவலகத்தில் பிரதேச செயலா ளர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ.சிவசுவாமி கலந்து சிறப்பித்தார்.

இத்தாவர சங்கமத்துள் மண்வளம் பெருக்கி மானுடம் காப்போம் எனும் தலைப் பில் யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரி யல் துறைத்தலைவர் கலாநிதி குணசிங்கம் மிகுந்தன் வழங்கிய ஆய்வுரை இடம்பெற்ற தோடு விழிப்பூட்டல் பிரசுரம் வெளியிடல் மற் றும் மரக்கன்றுகள் விநியோகித்தல் என்பன இடம் பெற்றது. (அ-3,4)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க முதலுதவிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற் பாட்டில் நடைபெறவுள்ள முதலுதவிப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடை பெறுமென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை தலைவர் அறிவித் துள்ளார்.

இப்பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து தொண்டர்களுக்குமான மீட்டல் வகுப்பு நாளை வியாழக்கிழமை காலை 10 மணி முதல் 3 மணி வரை இலங்கை செஞ்சிலு வைச் சங்க யாழ்.கிளையில் நடை பெறவுள் ளது. இதில்தவறாது கலந்து கொள்ளும் படியும் அத்துடன் தங்களுக்கான சுட்டி லக்கங்களை கிளை விளம்பரப் பலகையில் பார்வையிடும்படியும் இலங்கை செஞ்சி லுவை யாழ் கிளைத்தலைவர் வி. கே. கணேசலிங் கம் அறிவித்துள்ளார். (அ-6)

## எம்மை வளர விடுங்கள்

சிறுவர் பாதுகாப்பு இலங்கை, சட்டம் மற் றும் சமூக பாதுகாப்பு திட்டம் அனுசரணை யுடன் கிராமியமட்ட சிறுவர்பாதுகாப்பு குழு நடாத் தும் எம்மை வளரவிடுங்கள் எனும் நாட கம் உரும்பிராய் தெற்கு புளியடி நலன்புரி நிலையத்தில் இன்று புதன்கிழமை பி.ப 3. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ-6)

## சிறப்புச்சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத் தினரால் புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடப்புலம் நரசிங்க வைரவ ஆலய மஹோற் சவ காலங்களில் நடாத்தப்படும் சிறப்புச்சொற் பொழிவுகளின் ஒழுங்கில் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'திருவாசகம் என்னும் தேன்' எனும் தலைப்பில் சிதம்பரநாதன் சசீவ னும் , 26 ஆம் திகதி சனிக்கிழமை 'இந்து சமயம் காட்டும் அறநெறி' எனும் தலைப்பில் சைவப் புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் நித்திய தசி தரனும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ள னர். (அ-7)

## பொதுக்கூட்டம்

யாழ் மாவட்ட சிக்கன கடன் ஒழுங்கு கூட்டுறவு சங்கங்களின் பொதுக்கூட்டம் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண பல நோக்கு கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் தலைவர் சு. சிவசுப் பிர மணியம் தலைமையில் கூடவுள்ளது.

கூட்டநிகழ்ச்சிகள்சம்பந்தமான கடிதங் கள் அங்கத்தவர் சங்கங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற இருப்பதன் காரணத்தால் அங்கத் துவசங்கங்கள் குறித்த நேரதிற்கு தவறாது சமூகந் தருமாறு கூட்டுறவுச்சங்க தலைவர் கேட்டுள்ளார். (அ-3,4)

## பண்பாட்டுப்பேரவை பொதுக்கூட்டம்

வலி கிழக்கு பிரதேச பண்பாட்டு பேரவை யின் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வலி கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ. மோகன்ராஜ் தலைமையில் பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில நடைபெற வுள்ளது.இக்கூட்டத்தில் பண்பாட்டு விழா -நூல் வெளியீடு தொடர்பான கலந்துரையாடல் இடம் பெறவுள்ளன. (அ-134)

## யாழ். பொதுசன நூலகத்தில் தகவல் சாதனங்களின் காட்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு நூலகங்களில் தகவல்களையும் அறிவுத் தேடல்களையும் பெற உதவக்கூடிய நூலக சாதனங்களின் கண்காட்சி ஒன்று இன்று நண் பகல் 12 மணிக்கு மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவவால் ஆரம்பித்து வைக்கப் படும். இக் கண்காட்சியை ஏப்ரல் 30 ஆம் திகதி வரை பார்வையிடலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. (அ)

## புத்தகக்கண்காட்சி

(அச்சுவேலி)

வலி கிழக்குப்பிரதேச சபை, அச்சுவேலி உப அலுவலகத்தில் உலக புத்தக தினத்தை முன்னிட்டு புத்தகக்கண்காட்சி இன்றும் நாளையும் காலை 9மணிமுதல் 3.30 மணிவரை அச்சுவேலி உப அலுவலக பொறுப் பதிகாரி தி.மாணிக்கவாசகர் தலையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி கிழக்குப் பிரதேச சபை புத்தூர் செய லாளர் த.நடராசாவும் இனிய விருந்தினர் களாக அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வே. பாலசுப்பிரமணியம், அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி மேரி மரிய றோசாறியோ, இடைக் காடு மகா வித்தியாலய அதிபர் அ. அருந்தவநேசன், பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய அதிபர் எஸ். மோகனராஜன் ,அச்சுவேலி சரஸ் வதி வித்தியாலய அதிபர் எஸ். மாணிக்க வாசகர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-6)

* * *

பருத்தித்துறை பிரதேசசபை புத்தகக் கண்காட்சி இன்று புலோலி பொது நூலக மண்டபத்தில் பிரதேசச்சபைச்செயலாளர் எஸ்.பசுபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் புத்தகக் கண்காட்சியின் ஆரம்பவிழா வில் இளைப்பாறிய உள்ளூராட்சித் திணைக் கள நூலகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண் காட்சியைத் திறந்து வைப்பார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அதிபர் திருமதி. எஸ்.சுந்தரேசன்,பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி.எஸ். வசீகரன், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை நிர்வாக உத்தியோகத்தர் ஆர். விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.(ஓ-52)

## வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான மலடாக்கல் சத்திர சிகிச்சையும், கருத்தடை ஊசி ஏற்றலும் நாளை வியாழக்கிழமை பருத்தித்துறை வீதி நல்லூர் சிகிச்சை நிலையத்தில் நடைபெற உள்ளதாக யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

இதில் ஆண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்ஸையும், 8 மாதத்திற்கு மேற்பட்ட பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை ஊசி ஏற்றலும் நடை பெற உள் ளது. பொதுமக்கள் தங்களது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-7)



எச். என். பி அஷ்யூரன்ஸின் 2007 இறுதியாண்டு விற்பனை மேம்படுத்தல் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினரான வைத்திய கலாநிதி எஸ். பவானி மங்கள விளக்கேற்றுவதையும் வெளிக்கள முகாமையாளர் பி.அலன்கியூமர் உரையாற்றுவதையும் பிராந்திய முகாமையாளர் எஸ்.எம். புவிராஜ் பரிசில்களை வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ண ஒருநாள் துடுப்பாட்டப் போட்டி இன்று

## பிக்னல் மைதானத்தில் நடைபெறுகிறது

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 20-வது ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் துடுப்பாட்டப் போட்டி இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னல் மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டி இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

இப்போட்டிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஏ.மரின்குமாரும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வி.ஜோயல் செகானும் தலைமை தாங்குகின்றனர்.

இரு கல்லூரிகளுக்குமிடையிலான 91-வது பொன் அணிகள் போர் கடந்த மார்ச் 7ஆம்,8ஆம் திகதிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.இப்போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

அடுத்து ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் துடுப்பாட்டப் போட்டி கடந்த மாதம் 15ஆம் திகதி நடைபெறவிருந்தது.

எனினும் சீரற்ற காலநிலை காரணமாக நடைபெறாத போட்டி இன்று நடைபெறுகின்றது.

1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்துடுப்பாட்டப்போட்டி 1988, 1991, 1996 மற்றும் 1997ஆம் ஆண்டுகளில் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் நடைபெறவில்லை.

நடைபெற்ற 19 ஆட்டங்களில் 14 ஆட்டங்களில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றதுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 5 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது.

சமபலம் வாய்ந்த இரு அணிகள் மோதும் இன்றைய ஆட்டம் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5)

## செரீனா சம்பியன்

(அமெரிக்கா)

அமெரிக்காவிலுள்ள சார்லஸ்டான் நகரில் டபிள்யூ.டி.ஏ பேமிலி சர்கிள் கப் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்றன.

இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் தர வரிசையில்9 -வது இடத்தில் உள்ள அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ரஷ்யாவின் வேரா சுவனெரி வாவுடன் மோதினார்.

போட்டியின் முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டில் சுவனெரிவா 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இதனால் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட மூன்றாவது செட்டில் செரீனா சிறப்பாக விளையாடி 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி சம்பியன் கோப்பையை வென்றார். (5)

# 2009ஆம் ஆண்டு பாக் .செல்கிறது ஆஸி.

(கராச்சி)

நீண்ட எதிர்பார்ப்புக்குப் பின் 2009-10 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இருமுறை பாகிஸ்தானுக்குச் செல்வோம் என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதனை இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் உறுதி செய்துள்ளன. இந்திய சுற்றுப்பயணத்துக்குப்பிறகு பாகிஸ்தானுக்கு சென்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் ஆட அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை திட்டமிட்டிருந்தது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் படுகொலைக்குப்பிறகு நாடெங்கும் பதற்ற நிலை நீடித்ததை அடுத்து பாதுகாப்புக் காரணங்களைமுன்னிட்டுசுற்றுப்பயணம்ரத்தானது.

தொடர் குறித்து நிச்சயமற்ற தன்மை இருந்து வந்ததால் எதிர்காலத்தில் 2009-10 ஆண்டுகளில் இருமுறை பாகிஸ்தானுக்கு அவுஸ்திரேலியா சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டி கள் மற்றும் ஒரு இருபது-20 நடைபெறும் என தெரிகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நசீம் அஷ்ரப் கூறுகையில், இரு நாடுகளுக்கும் உறுதியான விருப்பம் இருந்தும் தொடர் ரத்துச்செய்யப்பட்டது. இதற்கு தீர்வை எட்டியுள்ளோம் என்றார். (5)

# சர்வதேச கிரிக்கெட் அட்டவணையில் ஐ.பி.எல் போட்டிகளை சேர்க்கவேண்டும்

## பி.சி.சி.ஐ கோரிக்கை

(கொல்கத்தா)

சர்வதேச கிரிக்கெட் அட்டவணையில் ஐ.பி.எல்.போட்டியை சேர்க்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபை சார்பில், முதல் முறையாக ஐ.பி.எல் இருபது-20 போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டிக்கான அணிகளில் வெளிநாட்டு வீரர்களும் இடம் பெற்றுள்ளனர்.

ஆனால் இதேநேரத்தில் சர்வதேச போட்டிகள் நடப்பதால் பல வெளிநாட்டு வீரர்கள் இத்தொடரில் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இங்கிலாந்து வீரர்கள் யாரும் இந்தத் தொடரில் ஆடவில்லை.

இத்தொடருக்கு ஐ.சி.சி அங்கீகாரம் அளித்தாலும் இதனை சர்வதேச கிரிக்கெட் அட்டவணையில் சேர்க்கவில்லை. இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் கூறுகையில், சர்வதேச கிரிக்கெட் அட்டவணையில் ஐ.பி.எல்.போட்டியை சேர்க்க வேண்டிய அவசியம் இன்னும் வரவில்லை என்று கருத்து தெரிவித்து இருந்தார்.

**கிரிக்கெட் சபை வேண்டுகோள்**

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் நிரஞ்சன் ஷா அளித்த ஒரு பேட்டியில், ஐ.சி.சி.யின் ஆண்டு போட்டி அட்டவணையில் இந்திய பிரிமியர்,லீக்கை (ஐ.பி.எல்) சேர்க்க வேண்டும் என்று விரைவில் கடிதம் எழுத உள்ளோம்.

இதன்மூலம் வெளிநாட்டு வீரர்கள் இந்த போட்டியில் விளையாட வசதியாக இருக்கும் என்றார்.

எல்லா வருடமும் வீரர்களை ஏலம் விடாமல் குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் வீரர்களை ஒப்பந்தம் செய்யலாம் என்றும் அவர் கூறினார். (5)

# ராஜஸ்தான் றோயல்ஸ் முதல் வெற்றி; யுவராஜ் அணிக்கு இரண்டாவது தோல்வி

(ஜெய்பூர்)

ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ், வொட்ஷனின் அதிரடியான ஆட்டத்தால் 6 விக்கெட்டுக்களால் கிங்ஸ்



லெவின் பஞ்சாப் அணியை வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இத்தொடரில் சர்வதேச பிரபல வீரர்கள், உள்ளூர் வீரர்கள் அடங்கிய 8 அணிகள் மோதுகின்றன.

இதில் 5-வது லீக் ஆட்டத்தில் நேற்று முன்தினம் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் ஷேன் வோன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெற்றுக்களையிழந்து 166 ஓட்டங்களை எடுத்தது.

இதில்யுவராஜ் சிங் 34பந்துகளில் (6 பவுண்டரி, 3 சிக்ஸர்கள் உட்பட) 57 ஓட்டங்களையும் ஹோல் 26 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பியூஸ்சாவ்லா 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஷேன்வோன் மூன்று விக்கெற்றுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 167 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஷேன் வொட்ஷனின் அதிரடியில் 18.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 168 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதில் ஷேன் வொட்ஷன் 49 பந்துகளில் (5 பவுண்டரிகள், 5 சிக்ஸ்சர்கள் உட்பட) 76 ஓட்டங்களையும் ஜடேஜா 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஷேன் வொட்ஷன் தெரிவாகினார். இவ்வெற்றியின் மூலம் ஷேன் வோர்னின் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றியைப் பெற்றது.

முன்னதாக ராஜஸ்தான் றோயல்ஸ், டில்லி அணி டேர்வில்ஸிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணி, தான் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது. (5)

# மக்கலம் சாதனையை முறியடிப்பேன்

(கராச்சி)

ஐ.பி.எல் இருபது-20 ஆரம்பப் போட்டியில் குறைந்த பந்துகளில் சதம் அடித்து சாதனை புரிந்த மக்கலம் சாதனையை



முறியடிப்பேன் என்று பாகிஸ்தான் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் முதலாவது போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக விளையாடிய மக்கலம் 73 பந்துகளில்158 ஓட்டங்கள் எடுத்து சாதனை புரிந்தார். இதனால் ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை முதலாவது போட்டியில் படுதோல்வி அடையச் செய்தது.

இது குறித்து அப்ரி கூறியது, ஐ.பி.எல் இருபது-20 முதல் போட்டியில் மக்கலம் அதிரடியாக துடுப்பெடுத்தாடி (158) குறைந்த பந்துகளில் சதம் எடுத்து சாதனை புரிந்துள்ளார். இருபது-20 போட்டிகளில் இவ்வாறு அதிரடியாக சதம் எடுப்பது கடினமானதாகும்.

இந்த சாதனையை முறியடிப்பது எளிதல்ல இருப்பினும் முயன்றால் என்னால் முறியடிக்க முடியும். ஒருநாள் போட்டிகளில் 37 பந்துகளில் சதம் எடுத்து சாதனை புரிந்துள்ளேன். இந்த சாதனை இருபது-20 போட்டிகளில் மக்கலம் சாதனையை முறியடிக்க எனக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக அல்லது நடுத்தர வரிசையில் துடுப்பாட்டம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் மக்கலம் போன்று அதிரடியாக விளையாடி சாதனை படைப்பேன். ஐ.பி.எல் போட்டிகள் திறமையை நிரூபிக்க அருமையான வாய்ப்பாகும். இவ்வாறு அப்ரிடி கூறினார். (5)

# ஐ.பி.எல். சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியை லோர்ட்ஸில் நடாத்த பி.சி.சி.ஐ தீர்மானம்

(லண்டன்)

ஐ.பி.எல் சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டியை லோர்ட்ஸ் மைதானத்தில் நடத்த இந்திய கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் சபை(பி.சி.சி.ஐ) சார்பில் இந்தியன் பிரிமியர் லீக்(ஐ.பி.எல்) அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இவ்வமைப்பு சார்பில் நடந்துவரும் இருபது-20 தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் போன்ற 8 அணிகள் விளையாடி வருகின்றன.

இதற்கு பின்னர் சம்பியன் லீக் என்ற பெயரில் சர்வதேச தொடர் ஒன்றை நடத்த ஐ.பி.எல் தயாராகி வருகிறது. இதில் தற்போதைய தொடரில் முதல் இரண்டு இடங்களைப்பிடிக்கும் அணிகள் மற்றும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த தலா ஒரு அணிகள் என மொத்தம் 6 அணிகள் பங்கேற்கின்றன.

இத்தொடரின் இறுதிப்போட்டியை இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடத்த பி.சி.சி.ஐ திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இத்தொடரை ஐ.பி.எல் விரைவில் நடத்த திட்டமிட்டிருப்பதால் அதற்குள் லோர்ட்ஸ் மைதானத்தில் ஏற்பாடுகளை செய்ய முடியுமா என்பது தெரியவில்லை. லோர்ட்ஸ் தயாராகாத பட்சத்தில் டுபாயில் இறுதிப் போட்டியை நடத்தவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (5)

# சர்வதேசம் மூக்கை நுழைக்க வாய்ப்பளிக்கும் மனித உரிமை மீறல்



## க.வே.பாலகுமாரன்

மிகக் குரூரமானதொரு கபடம் நிறைந்த அரசியல் பொம்மலாட்டமொன்று மீண்டும் சிங்களத்தில் அரங்கேறுகின்றது. இப் பொம்மலாட்டத்தினை நிகழ்த்துபவர்கள் ஜே.வி.பி.யினராக இருந்தாலும் ஆட்டுவிப்பவர் யார்? என்பதே எமது கேள்வி. இக் கபட நாடகத்தின் கருப்பொருள் இந்திய எதிர்ப்பு சென்ற பெப்ரவரி மாதம் பதினெட்டாம் நாள் அனுராதபுரத்தில் இந்திய விரிவாக்கத்திற்கெதிரான தமது பெருமெடுப்பிலான எதிர்ப்பியக்கத்தை ஜே.வி.பி. தொடங்கியது. அங்கு முழங்கித் தள்ளிய சோமவன்ச, தொடர்ந்தும் இந்தியத் தலையீடு அதிகரித்தால் இந்தியப் பொருட்களை புறக்கணிக்குமாறு மக்களை வேண்டுவோமென அச்சுறுத்தினார்.

13 ஆவது திருத்தம், இடைக்கால சபை என்பதெல்லாம் இந்திய விரிவாக்கத்திற்கு வழியமைக்கவே இவற்றினைக் கடுமையாக எதிர்ப்போம் என்றார். இப்பொழுது ஜே.வி.பி.யினர், மீண்டும் றோவின் தலையீடு, இந்தியப் பணித்துறை ஆட்சியாளரின் அடாவடித்தனம், பெரியண்ணன் நினைப்பு, தென்னாசியாவைத் தமது கொல்லையாக நினைக்கும் போக்கு என விளாசுகினறனர்.இவையெல்லாம் எமக்குப் பினனோக்கி ஓட்டப்படும் திரைப்படமொன்றின் காட்சிகளாகின்றன. 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யினர் தமது உறுப்பினர்களுக்கு எடுத்த ஐந்து பாடங்களுள் ஒன்று இந்திய விரிவாதிக்கம். இன்று, அன்று அதைக் கற்பித்தோரில் உயிரோடு இருப்பவர் சோமவன்ச மட்டுமே. அது போலவே **1987/88**களில் இந்தியாவை மிக இழிவாகப் பேசி இந்திய ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு இடம் கொர்டோமென்றும் ஏகாதிபத்தியத்தின் காவல் நாய்களே தமிழர் இயக்கங்களென்றும் இலங்கை - இந்திய உடன்பாடு அடிமைச்சாசனமென்று அலறியதும் தெரிந்ததே. இப்பொழுதும் அதேதான் நிகழ்கின்றது. அதிரடி அறிக்கைகளுக்கும் அரசியல் அதிர்வேட்டுக்களுக்கும் ஜே.வி.பி.யினரிடம் எப்பொழுதும் பற்றாக்குறையிருந்தது கிடையாது. என்றாலும் அவர்களது இந்த அதிர்வேட்டு வெறும் அரசியல் நாடகமா? அல்லது சிங்களத்தின் ஆழமான மனநிலையின் வெளிப்பாடா? இது பற்றி எவரும் மேலோட்டமான முடிவிற்கு உடனடியாக வர முடியாது. இருண்மை நிறைந்த மருமங்கள் புதைந்த ஐதீகங்களால் வனையப்பட்ட சிங்களத்தாரின் அடிமனத்தில் சில ஆழமான வெறுப்பு நோய்க் கூறுகள் உறைந்திருக்கின்றன. அதிலே வெளிநாட்டவர் மீதான வெறுப்பு நோயும் ஒன்று. சோமவன்ச அனுராதபுரத்தில் பேசிய பொழுது யார் எங்கள் எதிரி? என வினாவெழுப்பித் தானே விடையும் தந்தார். முதலில் நோர்வே, பிறகு பிரசல்ஸ் (ஐரோப்பிய ஒன்றியம்), வோசிங்டன், ரோக்கியோ, மேற்கு ஐரோப்பிய நாடுகள். இவர்கள் எங்களுக்கெதிராக நேரடியாக செயற்படுபவர்கள். ஆனால் இங்கே இன்னொரு பகை மறைந்திருக்கின்றது. அதுதான் புதுடில்லி என்றார்.எனவே இங்கே விடுபட்டிருக்கின்ற நாடு சீனா மட்டுமே. இங்குள்ள துயரம் அல்லது விபரீதம் என்னவென்றால் ரோக்கியோவோ வோசிங்டனோ, புதுடில்லியோ பெய்ஜிங்கோ ஏதோவொரு விதத்தில் சிங்களத்திற்கு ஒன்றில் நிதியுதவிகளை அல்லது இராணுவ உதவிகளை அல்லது இரண்டையுமே பெருமளவில் வழங்கிவருபவை தான். அதேவேளை ஏதோ ஒப்பிற்கு சிங்களத்தின் மனித உரிமை மீறல் எல்லை கடந்துவிட்ட நிலையில் வேறு வழியின்றிக் கடுமையான கண்டனங்களையும் மெலிதான சில தடைகளையுமிட்டு ஏனோதானோவென செயற்படுபவை. ஆனால் இதன்னைக் கூட பெய்ஜிங் செய்ய ஆயத்தமாகவில்லை. ஆகவே இவ்வகையில் தான் சீனா வேறுபடுகின்றது. ஆனால் சீனா இங்குதான் என்றில்லை. எங்கும் இதே கதை தான். மியான்மாரில், கென்யாவில், சூடானில் இன்னும் பல நாடுகளில் இதுவே அவர்கள் கதை. என்றாலும் சூடானில் தார்பூர் பகுதி மனித அவலத்தைப் புறந்தள்ளிச் சீனா, சூடானுக்கு வழங்கிய உதவி அனைத்து நாடுகளின கண்டனத்திற்குள்ளாகிச் சீனா சங்கடப்பட்டு, ஏன்? அவமானப்பட்ட நிலையிற் தனது நிலைப்பாடு குறித்து மீளாய்வு செய்யத் தள்ளப்பட்டுள்ளது. எனவே எம் மக்களும் என்றோவொரு நாள் சீனா மட்டுமல்ல ஏனைய நாடுகளும் வரலாற்று நீதியின் முன் தலைகுனிய நேரிடும். இதனால் தத்தம் போககினை மாற்ற நேரிடும் என்று திடமாக நம்புகின்றார்கள். எனவே இத்தகைய சீனத் தொடர்பு குறித்து சற்று பின்னோக்கிப் பார்த்தால் இன்றைய நிலையைப் புரிய அது உதவிடும். இற்றைவரை சிங்களத்தில் எக்கட்சி ஆண்டாலும் அது எவ்வித கொள்கையைக் கொண்டிருந்தாலும் அது பற்றிச் சீனா அலட்டிக் கொள்ளாமல் உறவு கொள்ள ஆயத்தமாகவே இருந்துள்ளது. எனினும் இப்பொழுது ஜே.வி.பி.யோடு கூட நெருக்கம் கொள்கின்றது. அது பதவிக்கு வருவதை விரும்புகிறது எனக் கூறப்படுகின்றது. சீனாவோடு தமது உறவு 2000 ஆண்டுகட்கு முற்பட்டதென சிங்களத்தார் பெருமையடித்துக் கொள்கின்றார்கள்.முதன் முறையாக ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் தான் சீன உறவிற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. புதிய நாடாக அப்போது தான் தோற்றம் பெற்ற சீனாவை 1950களில் சிங்களம் அங்கீகரித்தது. 1952இல் ஆர் ஆர் உடன்பாடெனப்படும் அரிவி இறப்பர் உடன்பாடு கைச்சாத்தாகியது. 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சியின் பொழுது அதனை அடக்க ஆயுதங்களை அள்ளி வழங்கியது. இதை ஜே.வி.பி. மறந்தாலும் வரலாறு மறக்காது. பின் ஜே.ஆர் காலத்தில் 1983 இன் பின் விடுதலைப் போர் முனைப்புப் பெறத் தொடங்கவே. முதன் முறையாக நொறின்கோ **(Norinco)** எனப்படும் வட சீனத் தொழிற் கூட்டுத்தாபனத்தோடு ஆயுதக் கொள்வனவு உடன்பாடு செய்யப்பட்டது. அன்று தொட்டு நொறின்கோ இங்கு ஆயுதக் களஞ்சியங்களைப் பேணத் தொடங்கியது. இவ்விராணுவ உதவிகளில் சீனாவால் முதலில் தமக்கு வழங்கப்பட்ட ரி-56 இலகு சுடுகலன் புலிக்கெதிரான தமது போரிடும் ஆற்றலைப் பெருமளவு அதிகரித்ததாகச் சிங்கள இராணுவம் நன்றியோடு கூறிக்கொள்கின்றது. ருசிய ஏ.கே 47 இன் சீனப் பதிப்பான இச் சுடுகலன் பாரம் குறைந்தது, பயன்படுத்த இலகுவானது. அதுவரை சிங்களம் பிரித்தானிய என்பீல்ட் குழுமத்தின் இரண்டாம் உலகப் போரின் பின்னாகப் பயன்பாட்டிலிருந்த எஸ்.எல்.ஆர் சுடுகலன்களையே பயன்படுத்தி வந்தது. சிறீமா காலத்தில் 1973 இல் பண்டாரநாயக்கா நினைவு மாநாட்டு மண்டபம், 1980 களில் ஜே.ஆர் காலத்தில் உயர் நீதிமன்ற வளாகக் கட்டடம், இப்பொழுது சீன மக்சிம் வங்கி வழி அம்பாந்தோட்டை துறைமுகம் உட்பட வளர்ச்சித் திட்டங்களுக்கு பாரிய நிதியுதவி **Y8,Y12,Y22** வான் கலங்கள் வழங்கியது. அந்தக்காலம் இப்போது **F-7G** வான்கலம். இவ்வாறாக சீனா படிப்படியாக சிங்களத்தின் முதன்மை ஆயுத விற்பனையாளராக, கொடையாளராக, பொருண்மிய உதவியாளராகத் தோற்றம் பெற்று விட்டது.

### கோகணவின் பேட்டி

அண்மையில் நியூயோர்க் ரைம்ஸ் ஏட்டிற்குத் தான் வழங்கிய செவ்வியில் பாலித கோகண பின்வருமாறு கூறினார். சிறிலங்காவின் பழமையான மரபுவழி கொடையாளரான கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் எல்லோருமே இப்போது ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். எமக்கு கீழைத்தேய உதவி குறிப்பாக சீனா போன்றவை அந்த இடத்தைப் பெறுகின்றன. சென்ற வருடத்தில் சீன உதவி ஐந்து மடங்காக, ஏறத்தாழ ஒரு பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்து யப்பானை விட கூடுதல் உதவி வழங்கும் நாடாக சீனா மாறியுள்ளது. இப்பொழுது சீனா எமது நாட்டில் ஒரு புதிய துறைமுகம், நெடுஞ்சாலை, இரு மின்னுற்பத்தி நிலையங்கள் என்பனவற்றை அமைத்துத் தருகின்றது என்றார் அவர்.எனவே இப்பொழுது சீனக் காதல் புதிய கட்டமொன்றுக்குள் நுழைகின்றது. இதற்கேற்ப ஜே.வி.பி.யினர் செயற்படுவதும் அதற்கு மறைமுகமாக மகிந்தர் ஆதரவு வழங்குவதும் புலப்படும் விடயங்கள். எனவே இப்பொழுது ஒரு புதிய வாய்ப்பாட்டு மாற்றம் ஏற்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றது. 20 வருடங்களுக்கு முன் இந்தியாவே இப் பகுதியில் ஒரேயொரு மேலாதிக்க நாடு. ஆனால் இப்பொழுது சீனா தன் நுட்பம் மிகுந்த செயற்பாடுகளால் இந்தியாவின் கொல்லைக்குள் சீனா புகுந்து விட்டது. சிங்கப்பூர் பல்கலைக்கழக சர்வதேச உறவுகளுக்கான பேராசிரியர் ராஜா மோகன் பின்வருமாறு குறிப்பிடுகிறார். சீனா இப்பொழுது இந்திய அயல் நாடுகளில் வீதிகள், துறைமுகங்கள் போன்றவற்றைக் கட்டி அவற்றினைத் தொடர்புபடுத்தித் தொடர்பு வட்டமொன்றை உருவாக்கி வருகின்றது. இந்து சமுத்திரத்தின் கடற்பாதை அதன் வளங்கள் யாவற்றின் மீதும் சீனா கண் வைத்துள்ளது. மனித உரிமை காப்பு அமைப்பின் தென்னாசிய ஆய்வாளர் மீனாட்சி கங்குலி சொல்கிறார். சிறிய நாடுகளெல்லாம் இப்பொழுது சீனா பக்கம் சாய்கின்றன. இதன் மூலம் இந்தியாவின் பிராந்திய நலன் தொடர்பிலான அதன் கொள்கையில் அழுத்தம் கொடுக்கவும் மனித உரிமை விடயத்தில் இந்தியாவை வாயடைக்கவும் இத்னை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். இப்பொழுது இந்தியா கவலைப்படத் தொடங்கியுள்ளது.இப்பொழுது இந்தியா தனது வெளியுறவுக் கொள்கை தொடர்பில் இந்தியாவால் ஒரு தெளிவான போக்கினை எப்போதும் வெளிப்படுத்த முடியாமலிருப்பது இப்பொழுது உணரப்படுகின்றது. தனது நலன்கள் அதற்குத் துணைபோகிறவர் என்கிற விடயங்களில் அதன் போக்கு பல தடுமாற்றங்களைக் கொண்டதாகினறது. இதற்கு எடுத்துக்காட்டாக முதலில் மியான்மார் இப்பொழுது சிறிலங்கா சான்றாவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.1990களில் மியான்மாரில் சனநாயகம் மீள வேண்டுமெனக் குரல் கொடுத்த இந்தியா, இபபோது இராணுவ ஆட்சிக் குழுவின் பக்கம் சாய்ந்துள்ளது. இங்கோ இமாலய குத்துக் கரணத்தை அடித்துள்ளது. கோகண தொடர்ந்து தன் செவ்வியில் சொல்கிறார் இந்தியாவின் உதவியும் அதிகரிக்கின்றது. இவ்வருடம் 500 மில்லியன் டொலரை ஈட்டும் அனல்மின் நிலையம், கைத்தொழில் பூங்காக்கள், தொலைத் தொடர்புத்துறை போன்றவற்றில் முதலிட இந்திய நிறுவனங்களை அழைத்துள்ளோம். காங்கேசன் சீமெந்து ஆலையை மீள இயக்க பிர்லா குழுமம் முயல்வதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்திய நலன்களுக்கு என்றும் தடையாக இருக்கக் கூடாதென்பது தமிழ் மக்கள் நிலைப்பாடு. இதனைப் பயன்படுத்தி தன்மீது அவநம்பிக்கையும் ஐயுறவும் கொண்ட சிங்களத் தரப்பை வழிக்குக் கொண்டு வர இந்தியா முயன்றது. இதனால் தமிழ் மக்கள் நலன்கள் என்பது இந்திய நலன்களுக்கு வாய்ப்பானது என்கின்ற சமன்பாடு சிங்களத்தில் உருவானது. இதுவே சீனா, பாகிஸ்தான் நிலையும். இதன் வ்ழி தமிழ் மக்கள் வாழ்வில் தீ அள்ளிப் போடப்படுகின்றது. ஒரு தொடர்ச்சியான விவேகமிக்க இராசதந்திர வெளியுறவுக் கொள்கையை வகுக்க முடியாமல் இந்தியா தடுமாறுவதால் இந்நிலை. 1970களிலிருந்து ஒவ்வொரு பத்தாண்டுகளாக வகுத்துப் பார்த்தால் இது புரியும். 2002 ஆம் ஆண்டு அமைதி முயற்சிகளைக் குழப்ப ஜே.வி.பி, சந்திரிகா போன்றோர் பயன்படுத்தப்பட்டதாகக் கொழும்பில் முன்னர் செய்திகள் அடிபட்டன. ஆனால் சீனா இதனை எவ்விதம் கையாள்கின்றது?. தனது ஸ்ரீலங்காவின் உடைவு என்கிற நூலில் ஏ.யே வில்சன் பின்வருமாறு எழுதியுள்ளார். 1979 இன் இறுதி வாக்கில் தன்னை இரவுணவிற்கு சீனத் தூதர் அழைத்திருந்தார். அங்கு நான் அவரிடம் தமிழர் தனிநாட்டு வேண்டுகை பற்றி சீன நிலைப்பாடென்னவென்பது பற்றிக் கேட்டேன். அதற்கு அவர் தமது ஆபிரிக்க நட்பு நாடுகளுடனும் வளைகுடா எண்ணெய் வள நாடுகளுக்குமான நல்லுறவினை இது பாதிக்கும். சோவியத்தின் இரையாகும் என்றார். இதுதான் இன்றைய நிலை, தமிழர் நலன்கள் என்பது இன்று சீனத் தரப்பிற்கும் இந்தியத் தரப்பிற்கும் தமது நலன்களை முன்னெடுக்க ஒரு ஏவுதளம். சர்வதேசத்திற்கும் இங்கு தனது மூக்கை நுழைக்க தமிழர் மீதான மனித உரிமை மீறல் ஒரு வாய்ப்பு. எல்லோர் நலன்களும் தமிழர் நலன்களுக்கு முன்னெடுக்கப்படும் விடுதலைப் போரின் அச்சிலே சூழல்கின்றது. இத்தனை பாதகமான நிலைமைகளுக்கு மத்தியிலும் வீறுடன் நடத்தப்படும் விடுதலைப் போர் உலகின் முதன்மைக் கவனத்திலுமுள்ளது. இவையாவையும் வரலாற்றன்னை மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கணக்கிலெடுத்து வருகின்றாள். இன மானமிகு பொன் கணேசமூர்த்தியின் வரிகளை மீண்டும் நினைவுறுகின்றோம்.

'சலிக்காமல் நடக்கும்
சக்தியினை அருளும்
செல்லும் வழிகளைச் செம்மைப்
படுத்தி வையும்
பாய்ச்சல் நிகழ்கையிலே பக்கத்துத்
துணையிருந்து
காற்றுச் சங்கூதும்'.

# யாழ்ப்பாணக்கல்விக் கோட்டத்தின் க.பொ.த.சா/த 2007 பெறுபேறுகள்

யாழ்ப்பாண நகரின் ஒரு பகுதியை கொண்டிருக்கும் யாழ்ப்பாணக்கல்விக் கோட்டம் கல்வி நிலையில் முன்னேற்ற கரமாக இருக்கும் பிரிவு என்பது ஒரு பொதுவான கருத்து. இக்கோட்டத்தில் 21



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை(Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்

பாடசாலைகளி லிருந்து மாணவர்கள் 2007 க.பொ.த. சா/த தரப் பரீட்சைக்குத் தோற்றினர். 21 பாடசாலைகளும் கல்வி நிலை, வளங்கள் மாணவர் பின்னணி போன்றவற்றில் ஒரேமாதிரியாக விளங்காது, தமக்கிடையே பல ஏற்றத்தாழ் வுகளைக்கொண்டுள்ளன. பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, பெறுபேறுகள் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு 21 பாட சாலைகளுள் 6 பாடசாலைகள் முன்னணிப் பாடசாலைகளாகவும் ஏனைய 15 பாடசாலைகள் வளங்கள், வசதி, வாய்ப்புகள் குறைந்த பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்கும் மாணவர்கற்கும் நடுத்தர பாடசாலைகளாகவும் ஆசிரியரினால் நோக்கப்பட்டுள்ளது.

ஏனைய நடுமட்டப்பாடசாலைகள் எனத் தனித்தனியாகநோக்குவதே பெறுபேறுகளின் உண்மை நிலையை அறிய வழியாகும்.

இக்கோட்டத்திலிருந்து 1366 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களுள் 861பேர் (63.3%) க.பொ.த. உ/த வகுப்பில் கற்கத் தகுதிபெற்றுள்ளனர். மேலும் 877பேர் (64.2%) தமிழ், கணிதம் உட்பட 6 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் சித்தி பெற்றுள்ளனர்.

மேலும் 34 மாணவர்கள் 10 பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளனர். (வேம்படி மகளிர் கல்லூரி- 22, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 4 , சென்ஜோன்ஸ் கல்லூரி 3, யாழ். மத்திய கல்லூரி 2 ,புனித சம்பத்தாசிரியர் கல்லூரி 2, வைத்தீஸ்வரா வித்தியாலயம் 1)

பரீட்சைக்குத் தோற்றிய 1366 மாணவர்கள் 13ஆயிரத்து 631 பாட அலகுகளுக்குத் தோற்றியுள்ளனர். இதில் 3ஆயிரத்து 350 (24.6 -A) 1840(13.5-B)2667(19.6-C) 2636(19.3-S) 3131(23.0W) பெறப்பட்டுள்ளன. A,B,C,S தரங்களில் சித்தி பெற்றோர் 77%மாகும். இதில் 57.7 %மானோர் A,B,C தரங்களைப்பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணக்கோட்டத்தின் க.பொ.த. சா/த 2007 பரீட்சைப்பெறுபேறுகள் பாடரீதியாக அட்டவணை Iஇல் காட்டப்பட்டுள்ளது.

பாடப்பெறுபேறுகளை நோக்கின் சமய பாடபெறுபேறுகள் மிக உயர்வாக உள்ளன. தமிழ் மொழியும் இலக்கியமும் -88.92%, கணிதம் -65.47%, ஆங்கிலம் 53.71%, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் 62.95 %, சமூகக் கல்வியும் வரலாறும் 83.57% ஆக உள்ளன. ஏனைய இணைப்பாடங்களின் பெறுபேறுகள் உயர்வாக இருப்பது கவனிக்கத்தக்கது. எனினும் சித்திரப்பாடத்தின் பெறுபேறு 45.52 ஆக இருப்பது திருப்தியாக இல்லை.

அட்டவணை I

| பாடம் | தோற்றியவர் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்தி % |
|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 772 | 397 | 110 | 147 | 89 | 29 | 96.24 |
| றோமன் கத்தோலிக்கம் | 506 | 208 | 143 | 109 | 43 | 3 | 99.41 |
| கிறிஸ்தவம் | 100 | 55 | 11 | 21 | 12 | 1 | 99.00 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 1363 | 415 | 206 | 339 | 252 | 151 | 88.92 |
| ஆங்கிலம் | 1363 | 280 | 101 | 154 | 197 | 631 | 53.71 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 1363 | 160 | 172 | 254 | 272 | 505 | 62.95 |
| கணிதம் | 1364 | 345 | 120 | 192 | 236 | 471 | 65.47 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 1363 | 384 | 198 | 257 | 300 | 224 | 83.57 |
| சித்திரம் | 438 | 05 | 16 | 52 | 122 | 243 | 44.52 |
| சங்கீதம் | 532 | 198 | 95 | 83 | 90 | 6 | 87.59 |
| நடனம் | 189 | 126 | 25 | 11 | 23 | 4 | 97.82 |
| ஆங்கில இலக்கியம் | 91 | 01 | 7 | 31 | 36 | 16 | 82.42 |
| தமிழ் இலக்கியம் | 762 | 117 | 110 | 155 | 146 | 234 | 69.29 |
| வரலாறு | 49 | 08 | 5 | 13 | 14 | 9 | 81.63 |
| புவியியல் | 570 | 47 | 71 | 125 | 156 | 171 | 70.00 |
| அபிவிருத்திக் கற்கை | 291 | 56 | 54 | 89 | 68 | 24 | 91.75 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 1031 | 313 | 191 | 251 | 194 | 82 | 92.05 |
| விவசாயம் | 208 | 12 | 17 | 48 | 66 | 65 | 68.75 |
| மனைவிஞ்ஞானம் | 255 | 05 | 10 | 62 | 103 | 75 | 70.59 |
| வர்த்தகமும் கணக்கியலும் | 572 | 89 | 91 | 146 | 141 | 105 | 81.64 |
| கட்டுமானத் தொழில்நுட்பம் | 7 | 0 | 0 | 05 | 2 | 0 | 100 |
| நாடகமும் அரங்கியலும் | 122 | 3 | 30 | 61 | 26 | 02 | 98.36 |
| மீன்படி | 99 | 9 | 22 | 24 | 27 | 17 | 82.83 |
| சுருக்கெழுத்தும் தட்டச்சும் | 2 | 0 | 0 | 0 | 0 | 2 | 0.0 |
| தக்வல் தொழில்நுட்பம் | 217 | 115 | 42 | 38 | 20 | 2 | 99.08 |
| இஸ்லாம் | 2 | 0 | 0 | 0 | 01 | 01 | 50.00 |

யாழ்ப்பாணக்கோட்ட கல்வி நிலையை ஆராய்வதற்கு இக்கோட்ட பகுதியில் வாழும் மக்களின் சமூக -பொருளாதார பின்புலத்தை தெரிந்திருப்பது முக்கியமாகும்.

இக்கோட்டத்திற்குள் சுண்டுக்குளியிலும் அதை அண்டிய பகுதிகளிலும் மத்திய தர வகுப்பினர் செறிவாக வாழ்கின்றனர். மேலும் இக்கோட்டத்திற்குள் செறிவான மக்கள் அடர்த்தியைக்கொண்ட குருநகர், பாசையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை ஆகிய குடியிருப்புகள் அமைந்துள்ளன. சமூக -பொருளாதார ரீதியிலும் பௌதீக ரீதியிலும் மிகவும் பின்தங்கிய பொம்மைவெளி, சூரியவெளி, மண்பிட்டி, கண்ணாபுரம், கற்குளம், சோலைபுரம், முத்தமிழ் கொலனி, மீனாட்சிபுரம், றெக்கிளமேஷன் தொடர்மாடி, வான்புரம், திருநகர் ஆகிய குடியிருப்புகளும் இக்கோட்டத்திற்குள் காணப்படுகின்றன. பாதிப்புக்குள்ளான முஸ்லிம் வாழ்விடப் பகுதியும் இங்குள்ளது.

இக்கோட்டத்தில் முன்னணிப்பாடசாலைகளில் மாவட்டம் தழுவிய மாணவர்கள் கற்க ஏனைய 15 பாடசாலைகளில் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கிய நகர மாணவர்கள் கற்கின்றனர். இதனால் யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தின் பரீட்சைப்பெறுபேறுகள் பொதுவாகவும் முன்னணிப்பாடசாலைகள்

இதுவரை இக்கோட்டத்தின் பரீட்சை பெறுபேறுகள் பொதுவாக நோக்கப்பட்டது. இனி முன்னணிப்பாடசாலைகளின் பெறு பேறுகளையும் ,ஏனைய நடுமட்டப்பாட சாலைகளின் பெறு பேறுகளையும் நோக் கலாம். இக் கோட்டத்தில் இனங்காணப்பட்ட முன்னணிப் பாடசாலைகள் பின்வருமாறு,

வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை (தேசியப்பாடசாலை, யாழ்.மத்திய கல்லூரி (தேசியப்பாடசாலை), சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, புனித திருக்குடும்ப கன்னியர் மடம் புனித சம்பத்திரியார் கல்லூரி , இவைகள் மூன்றும் சோடி சகோதர பாடசாலைகள் என்பது குறிப்பிடத்தக்கன. இப்பாடசாலைகளுள் 3, கட்டணம் பெறாது (என்.எப்எ. எல்.எஸ்) சமய நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இப்பாடசாலைகளின் பரீட்சை பெறுபேறுகள்அட்டவணை 2இல் காட்டப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகளிலிருந்து 896 பேர் பரீட்சைக்குத்தோற்றினர். 738 பேர் (82.37%) க.பொ.த. உ/த கற்கத்தகுதி பெற்றுள்ளனர். தகுதிபெற்றோரில் 621 (69. 30%) பேர் க.பொ.த.உ/த விஞ்ஞான பிரிவுக்கு தகமை பெற்றுள்ளனர்.

அட்டவணை II

| பாடசாலை | தோற்றியோர் எண்ணிக்கை | க.பொ.த.உ/த தகுதி | வீதம் |
|---|---|---|---|
| வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை | 219 | 219 | 100 |
| யாழ்.மத்திய கல்லூரி (N.S) | 192 | 134 | 69.79 |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி(NFLS) | 108 | 103 | 95.37 |
| சென்ஜோன்ஸ்கல்லூரி (NFLS) | 124 | 108 | 87.10 |
| புனித திருக்குடும்ப கன்னியர் மடம்(IAB) | 109 | 67 | 61.47 |
| புனித சம்பத்திரிசியார் கல்லூரி(NFLS) | 144 | 107 | 74.31 |

பாடசாலை ரீதியாக நோக்கின் வேம்படி 211, மத்திய கல்லூரி 104, சுண்டுக்குளி 87, சென்ஜோன்ஸ் கல்லூரி 101 , புனித புனித திருக் குடும்ப கன்னியர் மடம் 31.சம்பத்தாசிரியர்கல்லூரி 88, வேம்படியில் பரீட்சைக் குத்தேற்றிய 219 பேரில் 211 பேர் (96.3 %) விஞ் ஞானப்பிரிவில் படிப்பதற்கு தகுதி பெற்றுள் ளனர்.

மேற்கூறப்பட்ட 6 பாடசாலைகளின் பரீட்சை பெறுபேறுகள் சிறப்பாக இருப்பதால் கணிதம் , விஞ்ஞானமும்தொழில்நுட்பமும், ஆங்கிலம் ஆகிய 3 பாடங்களும் சிறப்பாக நோக்கப்படுகின்றன. (அட்டவணை III)

வேம்படி மகளிர் பாடசாலை கணிதத்தில் 100% சித்தி பெற்றிருப்பதுடன் 78 %மானோர் A தரம்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. ஏனைய 5 பாடசாலைகளில் Aதரம்பெற்றோர் வீதம் சராசரியாக 40 வீதத்திற்கு குறைவாகவுள்ளது. மேலும் இப்பாடசாலைகளில் மொத்தமாக 140 மாணவர்கள் கணிதத்தில் சித்தி பெறத்தவறியுள்ளனர். மத்திய கல்லூரியில் 54 பேர் கணிதத்தில் சித்தி பெறாதது மாணவர்களின் உயர் கல்வியை பாதித்துள்ளது. திருக்குடும்ப கன்னியர் மடம், சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் கணிதம் சித்தி பெறாதோர் எண்ணிக்கைகள் சற்று உயர்வாக இருக்கின்றன. அட்டவணை IIIஇல் காட்டப்பட்டுள்ளது.

ளது. 219பேரில் 218பேர் (99.54) ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றுள்ளனர். மேலும் 144 பேர் (65.08%) A தரம் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் ஆங்கில பாடபெறுபேறுகள் பாராட்டத்தக்கன. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியினதும் சென்ஜோன்ஸ்கல்லூரியினதும் பெறுபேறுகளும் சிறப்பாக உள்ளன. புனித சம்பத்தாசிரியர் கல்லூரியிலும் புனிததிருக்குடும்ப கன்னியர் மட பெறுபேறுகள் சுமாராகவுள்ளன.

யாழ். மத்திய கல்லூரி பெறுபேறு குறைவாகவுள்ளது. இங்கு 112பேர் சித்திபெறாதது கவனத்திற்குட்படவேண்டும்.

ஆங்கில இலக்கிய பாடப்பெறுபேறுகளை நோக்கின் ஆறு பாடசாலைகளில் இருந்தும் 93பேர் பரீட்சைகுத் தோற்றினர். இதில் 76 பேர் சித்த பெற்றுள்ளனர்.அட்டவணை V இல் காட்டப்படுகிறது.

வேம்படியில் 40 பேர் தோற்றி 38பேர் சித்திபெற்றனர். சென்ஜோன்ஸ்சில் 21 பேர் தோற்றி 15பேரும் சுண்டுக்குளியில் 19 பேர் தோற்றி 13 பேரும் புனித சம்பத்தாசிரியர் கல்லூரியில் 9 பேர் தேற்றி 8பேரும் யாழ். மத்திய கல்லூரியிலும் புனித திருக்குடும் கன்னயர் மடத்திலும் தலா இருவர் தோற்றி ஒரு வர் சித்தி பெற்றுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 6 பாடசாலைகளின் பரீட்சைப்பெறுபேறுகளிடையே காணப்படும் ஏற்ற இறக்கங்களுக்கு புலமைப்பரிசில் பெற்ற மாணவ நிலையும் , சமூக பொருளாதார ரீதியில் பாதிப்புக்குள்ளான மாணவ நிலையும் காரணங்களாக அமையலாம்.

அட்டவணை III கணிதம்

| பாடசாலை | தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | % |
|---|---|---|---|---|---|---|---|
| வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை | 219 | 171 | 22 | 17 | 9 | 0 | 100 |
| யாழ்.மத்திய கல்லூரி | 192 | 34 | 26 | 34 | 44 | 54 | 71.88 |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 124 | 44 | 14 | 29 | 16 | 5 | 95.37 |
| சென்ஜோன்ஸ்கல்லூரி | 144 | 42 | 18 | 30 | 20 | 14 | 88.71 |
| புனித திருக்குடும்ப கன்னியர் மடம் | 108 | 13 | 11 | 16 | 33 | 36 | 66.97 |
| புனித சம்பத்திரிசியார் கல்லூரி | 109 | 35 | 15 | 32 | 31 | 31 | 78.47 |

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடப் பெறுபேறுகளை நோக்கின் வேம்படி மகளிர் பாடசாலையில் பரீட்சைக்குத் தேற்றிய 219பேரில் 217 பேர் (99.9%) இப் பாடத்தில் சித்தி பெற்றள்ளனர். இவர்களுள் 92பேர் (42%) A தரம்பெற்றுள்ளனர். சென் ஜோன்ஸ் கல்லூரியும் சுண்டுக்குளிமகளிர் கல்லூரியும் A தரச்சித்தி சுமாராகப்பெற்றுள்ளனர். ஆறு பாடசாலைகளிலும் மொத்தமாக 185 பேர் இப்பாடத்தில் சித்தி பெறவில்லை. கணிதத்திலும் பார்க்க இப்பாடத்திலே கூடுதலான சித்தியின்மை வீதம் காணப்படுகின்றது. அட்டவணையில் IV இல் காட்டப்படுகிறது

இப்பாடத்தில் வேம்படி மகளிர் பாடசாலை மிகச் சிறப்பான பெறுபேற்றைப் பெற்றுள்

கோட்டமட்டத்தில் நடுத்தர மட்ட பாடசாலைகளின் பரீட்சைப்பெறுபேறுகள் குறைவாக இருந்தபோதும் முன்னணிப் பாடசாலைகளின் உயர் பெறுபேறுகளுடன் இப் பாடசாலைகளின் பெறுபேறுகள் இணைத்து நோக்கப்படுவதால் யாழ். கோட்டப் பரீட்சைப் பெறுபேறு கள் உயர்வாக விளங்குகின்றன. இதனால் இப் பாடசாலைகளின் பெறுபேற்றின் நிலையும் அதற்கான காரணிகளும் வெளிக்கொணரப்படுவதில்லை. 15 பாடசாலைகளும் அவற்றின் பரீட்சார்த்திகளின எண்ணிக்கையும் சித்தி வீதமும் அட்ட வணை VIஇல் காட்டப்பட்டுள்ளது.

இப் 15 பாடசாலைகளில் மொத்தமாக 470 பேர் க.பொ.த.சா/த பரீட்சைக்குத் தோற் றினர்.

அட்டவணை IV
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

| பாடசாலை | தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | % |
|---|---|---|---|---|---|---|---|
| வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை | 219 | 92 | 74 | 38 | 13 | 02 | 99.09 |
| யாழ்.மத்திய கல்லூரி | 192 | 07 | 13 | 44 | 69 | 59 | 69.27 |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 108 | 23 | 17 | 36 | 19 | 13 | 87.96 |
| சென்ஜோன்ஸ்கல்லூரி | 124 | 25 | 27 | 35 | 17 | 20 | 83.87 |
| புனித திருக்குடும்ப கன்னியர் மடம் | 109 | 5 | 12 | 28 | 30 | 34 | 68.81 |
| புனித சம்பத்திரிசியார் கல்லூரி | 144 | 7 | 20 | 45 | 35 | 37 | 74.31 |

அட்டவணைV ஆங்கிலம்

| பாடசாலை | தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | % |
|---|---|---|---|---|---|---|---|
| வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை | 219 | 144 | 33 | 30 | 11 | 01 | 99.54 |
| யாழ்.மத்திய கல்லூரி | 192 | 06 | 7 | 19 | 48 | 112 | 41.67 |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 108 | 45 | 18 | 16 | 20 | 09 | 91.67 |
| சென்ஜோன்ஸ்கல்லூரி | 124 | 47 | 20 | 25 | 21 | 11 | 91.13 |
| புனித திருக்குடும்ப கன்னியர் மடம் | 109 | 7 | 10 | 21 | 30 | 41 | 62.39 |
| புனித பற்றிக்ஸ் கல்லூரி | 144 | 28 | 9 | 29 | 26 | 52 | 63.89 |

(நாளை தொடரும்)

# சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?




இது வரை உங்கள் ராசிக்கு தனம், வாக்கு, குடும்ப ஸ்தானம் மற்றும் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரித்த ராகு-கேது பகவான்கள், 30.4.08 அன்று ஜென்மம் மற்றும் சப்தம ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்கள். ஜென்ம ராசியில் சஞ்சரிக்கும் ராகு பகவான், உங்களின் பேச்சையும் கருத்துக்களையும் அடுத்தவர்கள் கேட்க வைப்பார். உங்களின் தன்னம்பிக்கை வளரும். திறமைகள் பளிச்சிடும். அதே நேரம் உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கப் படும்; உடனுக்குடன் மருத்துவரை அணுகவும்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்கேது பகவான், கூட்டாளிகளுடன் இணக்கமான உறவை மேம்படுத்துவார். பிரச்சினை வரும் விஷயங்களிலிருந்து ஒதுங்கி விடுவீர்கள். மற்றபடி நேரம்பாராது உழைக்க வேண்டியிருக்கும். நண்பர்களின் ஆதரவுடன் உங்களின் செயல்களைச்செய்வீர்கள். வருமானத்திற்குக் குறைவு வராது. அதே நேரம் நண்பர்கள் போல் பழகும்விரோதிகளை, இனம் கண்டு ஒதுக்கவும். சமுதாயப் பணிகளில் உங்கள் ஈடுபாடு கூடும்.

இந்த ஆண்டு இறுதி வரை சனி பகவான் உங்களின் அஷ்டம ராசியில் குரு பகவானின் பார்வையில் சஞ்சரிக்கிறார். இதனால் உங்கள் செயல்களை கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் செய்வீர்கள். உற்றார், உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். வருமானம் சீராக இருப்பதால், கடன் சுமை இராது. இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு சனி பகவான் தனித்து இயங்கும் காலத்தில் உங்களின் செயல்கள், தடைகளுக்குப் பிறகே வெற்றி பெறும். எதையும் ஒரு முறைக்கு இரு முறை ஆலோசித்துச் செய்ய வேண்டிய கால கட்டமிது.

செலவுகளும், வீண்விரயங்களும் உண்டாகும். குருபகவான் அருளால் இந்த ஆண்டு இறுதி வரையில், வெளியூர் மற்றும் வெளி நாட்டிலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். கோயில் பணிகளில் ஈடுபடுவீர்கள். பெரியோர்களின் ஆசிகளைத்தேடிப் பெறுவீர்கள். இந்த ஆண்டின் இறுதிக்குப் பிறகு பொருளாதாரச்சிக்கல் என்று வராவிட்டாலும், செலவுகள் சற்று அதிகரிக்கும். மனதில் காரணமில்லாமல் கவலை சூழும். சில இழப்புகளுக்குப் பிறகே வெற்றிகளை அடைவீர்கள். அதனால் உங்கள் பொறுப்புக்களைக் கவனத்துடனும், நிதானத்துடனும் செய்து முடிக்கவும்.

உத்தியோகத்தர்கள் இயந்திர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க நினைப்பார்கள். உங்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவர்களை விலக்கிவிடுவீர்கள். அலுவலக வேலைகளில் பளு கூடினாலும், அதனைச் சமாளிக்கும்ஆற்றலும் உண்டாகும். சக ஊழியர்களும் தேவைக்கேற்ப உதவிசெய்வர். மேலதிகாரிகளின் ஆதரவுடன் பதவி உயர்வு கிடைக்கும். சிலர் கடன் வாங்கி வாகனம் வாங்குவார்கள்.

வியாபாரிகளின் லாபம் பெருகினாலும், கடும் போட்டிகளைச் சந்திக்க நேரிடும். அதனால் வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப் பேசவும். முன் கோபத்தைத் தவிர்க்கவும். புதிய முதலீடுகளும் செய்ய வேண்டாம். மற்றபடி வேகமாக விற்பனையாகும் பொருட்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வியாபாரம் செய்யவும். கூட்டாளிகளும், நண்பர்களும் உங்களிடம் சாதகமாக நடந்து கொள்வர்.

விவசாயிகளின் திறமைகள் வீண் போகாது. விளைச்சல் அதிகரிக்கும் அதே நேரம் புழு-பூச்சிகளின் பாதிப்பினால் சிறு செலவு செய்ய நேரிடும். எனினும்கடன் பிரச்சினை எதுவும் இராது. சக விவசாயிகளுக்கு உதவிகளைச் செய்து மகிழ்வீர்கள். உப தொழில் களில் கவனம் செலுத்துவீர்கள்.

அரசியல்வாதிகளுக்கு கட்சியில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். மேலிடம் உங்களை நம்பி ஒப்படைக்கும்பணிகளைச் செவ்வனே செய்து முடித்து விடுவீர்கள். தொண்டர்களின் பாராட்டும் கிடைக்கும்.

கலைத்துறையினர் கை நழுவிப் போன ஒப்பந்தங்களை திரும்பப்பெறுவர். உங்களின் முயற்சிகள் எதிர்காலத்தில் நல்ல பலனைத்தரும். தொழிலில் நன்றாகச்செயற்பட்டு, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். அதே சமயம், சக கலைஞர்கள் நட்பு பாராட்டமாட்டார்கள்.

பெண்மணிகளுக்கு கணவருடனான உறவு சீராகும். குடும்பத்தில் சந்தோஷத் தைக் காண்பீர்கள். உற்றார்-உறவினர்களிடமிருந்து நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்படும். தெய்வ பலம் கூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக் கும்.

மாணவமணிகளின் புத்தி கூர்மையடையும் நல்ல மதிப்பெண்களைப் பெறுவதற்கு வாய்ப்புண்டாகும். போட்டிகளில் பங்கேற்று பாராட்டைப் பெறுவீர்கள். உடற்பயிற்சிகளை மேற்கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பெற்றோர் சொல் கேட்டு நடப்பீர்கள்.

(தொடரும்)

## புவி வெப்பமடைவதால் இலங்கைக்கும் பாதிப்பு

(கொழும்பு)

கைத்தொழில் மயமாக்கல் மற்றும்போக்குவரத்துக்களின் அதிக்ரிப்பு போன்றன இலங்கையில் புவி வெப்பமடைதலுக்கு வழி வகுப்பதாக மத்திய சூழல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

புவி வெப்பமடைவதன் காரணமாகவே இலங்கையில் அதிகரித்த மழை பெய்து வருவதுடன், இதனால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், பொலனறுவை மாவட்டத்தில் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் அனில் சுனீதா கூறியுள்ளார்.

தற்பொழுது இலங்கையில் காணப்படும் மழையுடன் கூடிய காலநிலை வழமைக்கு மாறானது. இதனால்தான் பொலனறுவை மாவட்டத்தில் நெல் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. நீர் ஆவியாதல் அதிகரித்துள்ள போதும், மின்சாரமும் அதிகளவில் ஏற்படுகிறது.

இதனால் மின்னல் மற்றும்இடி ஆகியன ஏற்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார். கைத்தொழில்மயமாக்கல் மற்றும் போக்கு வரத்துக்களின் அதிகரிப்புப் போன்றனவால் இலங்கையில் புவி வெப்பமடைகிறது. இது தொடர்ந்து சென்றால் நிலங்கள் காய்ந்து பாலைவனத் தை விட மோசமாக வரட்சி ஏற்பட்டுவிடும் என மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் அனில் சுனீதா மேலும் கூறியுள்ளார். (அ-5)

## பதவியுயர்வும் இடமாற்றமும்

(பருத்தித்துறை)


பருத்தித்துறை பிரதேச செயலக நிதி உதவியாளர் எஸ். தேவராசா மத்திய அரசாங்கத்தினால் பொது முகாமைத்துவ உதவி யாளர் அதிசிறப்பு தரத்திற்குப் பதவி உயத்தப்பட்டுள்ளார். இவர் 11.02.2008 இலிருந்து சாவகச்சேரி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராகப் பொறுப் பேற்றுள்ளார். (அ-52)

## சோமாலியாவில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்தோர் தொகை 81 ஆக உயர்வு

(மொகாடிஷு)

வடகிழக்கு ஆபிரிக்கா நாடான சோமாலியாவில் 1969 முதல் 1991 வரை இராணுவ ஆட்சி நடந்தது. 1991 ல் யுனைடெட் சோமாலியாக் காங்கிரஸ் கட்சி இராணுவ ஆட்சியை அகற்றி விட்டு ஆட்சி அமைத்தது.

காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து இஸ்லாமிய தீவிரவாதிகள் ஒரு பிரிவினர் போராட்டம்



நடத்தி வருகின்றார்கள். 2006இல் ஆட்சியை பிடித்த அவர்கள் மீண்டும் விரட்டியடிக்கப் பட்டனர். அவர்களை ஒடுக்க எதியோப்பிய படை சோமாலியா சென்றுள்ளது.

கடந்த சில மாதங்களாக எதியோப்பிய படைகளுக்கும் உள்ளூர் இஸ்லாமிய வீரர்களுக்கும் மோதல் நடந்து வருகிறது. இரு தரப்பினருக்கும் இடையே நடந்த மோதல்பெரும் கலவரமாக மாறியது.

தெருக்களில் சென்றவர்களை தீவிரவாத அமைப்பினர் சரமாரியாகத்தாக்கினார்கள். எதியோப்பியா படை வீரர்கள் மீது பல இடங்களில் துப்பாக்கி சூடு நடந்தது. இதில் 81 பேர் பலியானார்கள். 151 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த கலவரத்தால் சோமாலியாவில் பதற்றம் நிலவுகிறது.

இதையடுத்து தலைநகர் மொகடிஷு வில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நகரில் இடம்பெற்ற மோதல்களில் 6500 பேர் கொல்லப்பட்டதுடன் 1. 5 மில்லியன் பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

மொகாடிஷுக்கு வெளியே சுமார் இரண்டரை இலட்சம் பிரஜைகள் இடம் பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களிற்கு மத்தியில் வாழ்வதாக சர்வதேச தொண்டு ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன. இது உலகிலேயே மாபெரும் உள்நாட்டு இடப் பெயர் வாக கருதப்படுகிறது. (அ-5)

## டைட்டானிக் ஞாபகச் சின்னங்கள் ஒரு இலட்சம் ஸ்ரேலிங்பவுண்ட்டுக்கு ஏலம்

1912 ஆம் ஆண்டு இடம் பெற்ற டைட்டானிக் சொகுசு கப்பல் விபத்தில் உயிர் பிழைத்த பெண் ஒருவரால் அக்கப்பல் விபத்தின் ஞாபகார்த்தமாக காலணிப்பெட்டி ஒன்றில் அமைக்கப் பட்டிருந்த பொருட்கள் ஒரு லட்சம் ஸ்ரேலிங் பவுண்ட்டுக்கு விற்பனை ஆகியுள்ளன.

லில்லியன் அஸ்பிளன் ட் என்ற மேற்படி பெண்மணிக்கு சொந்தமான இந்த காலணிப்பெட்டி டைட்டானிக் கப்பலுக்கான விற்பனையா காத எஞ்சிய நாலு பயணச் சீட்டுக்களில் ஒரு சீட்டையும் உள்ளடக்கி இருந்தது.

அச் சமயம் லில்லியன் அஸ்பிளன்ட்5 வயது சிறுமியாக இருந்தார். விபத்து நடைபெற்றபோது உயிர் பாது காப்பு படகு மூலம் லில்லியின் அஸ் பிளன்ட்டும் அவரது தாயாரும் அவரது சகோ தரர் ஒருவரும் காப்பாற்றப்பட்டனர். எனினும் அவ ரது தந்தை கார்ல் மற்றும் ஏனையமூன்று சகோ தரரும் இவ் விபத்தில் உயிரிழந்தனர். கடந்த 2006 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி தனது 99 ஆவதுவயதில் லில்லியன் அஸ்பிளன்ட் மரணமடைந்தார். லில்லியன் அஸ்பிரன்ரின் டைட்டானிக் ஞாபகார்த்த பொருட்கள் ஏலத்தில் விற்பனையாகியுள்ளன. (அ-5)

## இலங்கை செஞ்சிலுவை சங்கம் அலகு ஆண்டுப் பொதுக்கூட்டமும் அலகு நிர்வாக சபை தேர்தலும்

23.04.2008ற்கு முன்னதாக 2008 ஆண்டுக்கான செஞ்சிலுவை சங்க உறுப் பினர்கள் ஆண்டுச்சந்தாவை அவ்அப்பிரிவு தலைவர் / செயலாளர்/ பொருளாளர், கிளைத்தலைமையகத்துக்கு செலுத்தினால் மட்டுமே அவ் உறுப்பினர்கள் மேற்படி தேர்தலில் பங்கு பற்ற முடியும் .25.04.2008க்கு முன்னதாக இவர்களின் பெயர் பட்டி யல் தலைமையகத்துக்கு அனுப்ப வேண்டும். கிளையில் தயாரிக்கப்படுகிற உறுப் பினர் பட்டியலை தாங்கள் எம்முடன் தொடர்பு கொண்டு உறுதி செய்யவும்.

*கௌரவ தலைவர் இ.செ.ச.*
*யாழ். கிளை.*

(சி/1052)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### பனிச்சை

Botanical name: Diospyros peregrina
Family: Ebenaceae
English: Riber ebony
Sinh: Timbiri

இது ஒரு மரவகையைச் சார்ந்தது. பரந்த கிளைகளை உடையது. இலைகள் கரும் பச்சை நிறம். பட்டை கறுப்பு நிற முடையது. இதன் பழங்கள் பெரியவை, மண்ணிற முடையவை. பழங்களைப்பார்க்கும் போது மங்குஸ்தான் பழம் போன்று காட்சியளிக்கும். ஆனி, ஆடி காலப் பகுதியில் பழுத்த பழங்களை பெறமுடியும். இம்மரம் ஆனது விதைகள் மூலம் இனவிருத்தி அடையும். நிழலான ஈரலிப்பான மண்வளம் உள்ள பிரதேசங்களில் வளரக்கூடியது. மத்திய மலை நாடுகளில் அழகு மரங்களாக வளர்க்கப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் ஐயன்காடு, கொடிகாமம், கச்சேரியில் இயற்கையாக காணப்படுகிறது.

**பயன்படும் பகுதிகள்:**
பழம்(fruit)
பட்டை(bark)

**மருத்துவச் செய்கை:**
துவர்ப்பி(Astringent)
குருதிப்போக்கடக்கி(Styptic)

**மருத்துவச் சத்துக்கள்:**
High percentage of picton
Tannin
Gallo-tannic acid

**மருத்துவ பயன்பாடு:**

1. பழத்தின் ஊறல் குடிநீர், தற்போது பொதுவாக ஏற்படும் வாய்ப்புண் போன்ற நிலைமைகளில் வாய்கொப்பளித்து வர புண் ஆறும். அதாவது நன்றாக கனிந்த பழத்தை



30-60 ml குளிர்ந்த நீரில் முதல் நாள் ஊறப்போட்டு மறுநாள் காலை அந்நீரை வாய் கொப்பளிக்க பயன்படுத்தலாம். தொண்டை தாபித நிலைமைகளில் (sore throat) மேற்படி நீரைப் பயன்படுத்தலாம்.

2. இதன் பட்டைக்குடிநீரை, விட்டு விட்டு வரும் சுரங்களிலும், சீதக்கழிச்சலிலும் பயன்படுத்தலாம்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம், கைதடி

3. பழத்திலுள்ள பிசினுடன் சேர்ந்த சதைப் பகுதியை (pulped fruit gum) கெட்டியான தூய பருத்தித்துணியில் பூசி வலி வீக்கத்துடன் கூடிய வாத நோய்களில் பற்று இடப் பயன்படும்.

இது ஒரு சில யாழ்ப்பாணத்து பரம்பரை வைத்தியர்களால் பயன்படுத்தப்படுகிறது.

Note: The other extract of the fruits possesses anti-bacterial activity against Escherichia-coli.

(The Wealth of India)

ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கிறான்!
அதனால்தான் உலகில் இத்துணை முட்டாள்கள் இருக்கின்றார்கள்.
—அங்கேரி

வலம்புரி

## இலங்கைப் பிரச்சினையில் அரசியல் இலாபம் தேடும் கலைஞர்

இலங்கைப் பிரச்சினை தொடர்பில் அ.தி.மு.கவின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழகத்தின் முதல்வர் கலைஞர் கருணாநிதி,வை. கோபாலசாமிக்கு சவால் விட்டுள்ளார்.

கலைஞரின் இச்சவால் சமகால சூழ்நிலைக்கு ஏற்புடையதும், பொருத்தப்பாடுடையதும் அல்ல.

இலங்கைத் தமிழர்கள் மிகவும் மோசமான, இக்கட்டான நிலைக்குள் உள்ளனர்.

இவர்களுக்குத் தேவை ஆறுதலான வார்த்தையோ அன்றி உணர்ச்சி வசமான வார்த்தைகளோ அல்ல.

யுத்தம் நடந்து கொண்டு இருக்கிறது. மனிதர்கள் அழிந்து கொண்டிருக்கின்றனர். கடத்தல் மற்றும் காணாமல் போதல் நிகழ்வுகள் சர்வ சாதாரணமாக நடந்தேறுகின்றன.

ஐ.நா சபை உள்ளிட்ட உலகப் பொது அமைப்புகள் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமாக உள்ளதாக கூறிவருகின்றபோது, கலைஞர் கருணாநிதி வை.கோவுக்கு சவால் விடுவது எவ்வாறு பொருத்துடையதாகும்.

நடிகர் சத்தியராஜ் அவர்கள் வழங்கிய செவ்வி ஒன்றில் கலைஞர் கருணாநிதியின் காலத்திலேயே இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

ஆனால் கலைஞரோ இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முடிந்தால், செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவின் ஆதரவைப் பெறுமாறு வை.கோவுக்கு கலைஞர் சவால் விட்டிருப்பது இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்துவது போலவே தெரிகிறது.

கருணாநிதி அவர்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருந்து கொண்டு இந்த சவாலை விட்டால் கூட நியாயமானதெனக் கூறலாம். ஆனால் அவரோ தமிழகத்தின் முதல்வர்.

அவரின் ஆதரவு மத்திய அரசுக்கு பெருந்துணையாகிறது. இத்துணை சாதகத் தன்மையை வைத்துக் கொண்டு அ.தி.மு.கவின் ஆதரவைப் பெறுமாறு கேட்பது ஏன்?

வை.கோவைப் பொறுத்தவரை அவர் தி.மு.கவில் இருந்தபோதும் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக மாறியபோதும் கூட ஈழத்தமிழருக்கு குரல் கொடுக்க அவர் தவறவில்லை.

அண்மையில் கூட நோர்வேயின் தலைநர் ஒஸ்லோவில் நடந்த மாநாடொன்றில் இலங்கையைச் சேர்ந்த சிங்களப் பிரதிநிதிகளுடன் வை.கோ.காரசாரமான விவாதம் நடத்தினார்.

இன்னமும் அவர் ஈழத் தமிழர் பொருட்டு பல காரியங்களை செய்வார் என எதிர்பார்க்கலாம். எனவே கலைஞர் கருணாநிதி வை.கோவை கடித்துக் குதறுவதாக நினைத்து இலங்கை தமிழர்களுக்கு கெடுதி விளைவிக்கக் கூடாது.

அவர் தனது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழர்களின் விடியலுக்காக–வாழ்வுக்காக குரல் கொடுக்கவேண்டும்.

இந்திய மத்திய அரசின் தலையீடின்றி இலங்கைப் பிரச்சினை தீராதென்னும் நியாயத்தின் அடிப்படையில் கலைஞர் கருணாநிதி புலமைச் சவால் விடுவதை அடியோடு விடுத்து ஆக்க பூர்மான நடவடிக்கைகளை மேற்கொள்ள் வேண்ம்.

# உலக உணவு உற்பத்தியை அதிகரிக்காவிட்டால் வளர்முக நாடுகளின் ஸ்திரத்தன்மை பாதிப்புறும்

## ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் எச்சரிக்கை

(கொழும்பு)

உலகமானது அதிவேகமாக அதிகரித்து வரும் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்கும் வகையில் விவசாய உற்பத்திகளை உடனடியாக அதிகரிக்க வேண்டியுள்ளது எனவும், இல்லையேல் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு அது அச்சுறுத்தலாக அமையும் எனவும் ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயகம் பான் கீ–மூன் எச்சரிக்கை விடுத்துள்ளார். 2007 ஆம் ஆண்டு மத்தியிலிருந்து உணவுகளுக்கான செலவினமானது உலகளாவிய ரீதியில் 40 சதவீதமளவில் அதிகரித்துள்ளது.

நாங்கள் தவறு எதனையும் செய்யவில்லை. பிரச்சினை பாரியதாக உள்ளது நாங்கள் சரியான உதவி வழங்கினால் தீர்வுகள் கிட்டும் என பான் கீ- மூன் தெரிவித்தார். கானாவின் தலைநகர் ஆக்ராவில் இடம் பெற்ற வாணிபம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 5 நாள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியில் உலகமானது அது உற்பத்திசெய்வதை விட கூடுதலான அளவு நுகர்கிறது என்பது மட்டும் நிச்சயம் என பான் கீ–மூன் குறிப்பிட்டார்.

எண்ணெய் விலைகள் உயர்ந்தமை. அமெரிக்க டொலரின் வீழ்ச்சி, இயற்கை அனர்த்தங்கள் என்பனவே உலக உணவு விலையேற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ளதாக அவர் தெரிவித் தார்.

ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டமானது 80 நாடுகளிலுள்ள 73 மில்லியன் மக்களுக்கான உணவுகளைப் பெற்றுக்கொடுக்க வருடாந்தம் 750 மில் லியன் அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்க திட்டமிட்டுள்ளதாக பான் கீ–மூன் கூறினார்.

உலக பொருளாதார வரைவிலக்கணங்களுக்கு அமைய அல்லாமல் உலகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளை கருத்திற் கொண்டு உணர்வு பூர்வமாக செயற்படவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதாக அவர் இதன்போது வலியுறுத்தினார். (அ-5)

# மகேஸ்வரன் எம்.பி. படுகொலை வழக்கு நால்வருக்கு 5ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள தம்பதிகள் உட்பட சந்தேக நபர்கள் நான்கு பேரை யும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண உத்தரவிட்டுள்ளார்.

மகேஸ்வரன் எம்.பி. யின் படுகொலை வழக்கு விசாரணை கொழும்பு பிரதான நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது வழக்கின் முதலாம் சந்தேக நபரான கொலின் வெலன் ரைன், 2 ஆவது சந்தேக நபரான பிரான்சிஸ் சுதர்சன் மற்றும் மூன்றாவது சந்தேக நபரை இந்தியாவுக்கு அனுப்புவதற் கான ஏற்பாடுகளைச் செய்த தாகக் கூறப்படும். பெண்ணுக்கு வீடு வாடகைக்கு வழங்கிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தம்பதிகளான சந்தானம் பிரியதர்சினி பெருமாள் பிரதீபன் ஆகியோர் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பிரதான சந்தேக நபரான கொலின் வெலன்ரைனை படுகொலை சம்பவத்துக்கு பின் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும் ஏற்பாட்டினை சிவபாதம் நான்சி எனும் பெண் மேற்கொண்டுள்ளார். அந்த பெண் ராஜா எனும் மற்றொரு உறுப்பினருடன் வத்தளையில் கைதுசெய்யப்பட்டுள்ள தம்பதிகளின் வீட்டில் வாடகைக்கு இருந்துள்ளார். இவ்வாறு வாடகைக்கு குடியிருந்த பெண்ணே கொழும்பு–கோட்டை புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதனையடுத்தே தம்பதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். படுகொலை விசாரணையில் குறித்த பெண்ணுடன் இருந்த ராஜா என்பவரை தேடிவருகின்றோம் என தெரிவித்திருந்தனர்.

### அமைச்சர் கெஹெலியவின் வாக்குமூலம்

வழக்கு விசாரணையின் போது பாதிக்கப்பட்டோரது குடும்ப நலனை கவனிப்பதற்கு ஆஜரான சட்டத்தரணி சுஜீச சேரசிங்க, படுகொலை சந்தேகநபர்த ஈ.பி.டி. பி. உறுப்பினர் என்று அமைச்சரும் அர சாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங் களுக் கான பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் இன்ஸ்பெக்டர் ஆர். எம்.ஏ. ரட்ணாயக்க அமைச்சரின் கருத்து தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் அறிக்கை மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (அ-5)

# பொதுப்போக்குவரத்து சேவையின் சீரின்மை பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கிறது

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

பொதுப்போக்குவரத்து சேவையின் சீரின்மையானது பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இருப்பதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுப்போக்குவரத்து சேவையில் பிரதானமாக, தனியார் பேரூந்து சேவைகளால், மனித மணித்தியாலங்கள் இழக்கப்படுவதுடன் போக்குவரத்து செலவுகளும், எரிபொருள்களும் விரயமாவதாகக் குறிப்பிட்டுள்ள மத் திய வங்கி, பழுதடைந்த வீதிகள் மற்றும் போக்குவரத்து நெரிசல்கள் என்பனவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பிரதிபலிப்பதோடு தேசிய எரிபொருள் பட்டியலில் அதிகரிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சீரற்ற போக்குவரத்து வசதிகள், பழுதடைந்த வீதிகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் என்பன பெரிய நகரங்களில் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகவும், இதன் மூலம் உற்பத்திகள் குறைவடைவதனூடாக பொருளாதார வளர்ச்சியை மோசமாகப் பாதித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் 2007 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருட காலப்பகுதியில் 6 வீதத்துக்கும் அதிகமான உயர் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட போதிலும், பொருளாதார வளர்ச்சி வேகத்துடன் அதிகரித்திருக்கும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றதாக வீதிகளின் வலையமைப்பு இல்லை எனவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

வீதி வலையமைப்புக்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை. முக்கிய வீதிகள் தரம் குறைந்தவையாகவும், போக்குவரத்து நெரிசல்களை ஏற்படுத்துபவையாகவுமே காணப்படுகின்றன என மத்திய வங்கியின் ஆண்ட றிக்கையில் குறிப்பிடப் பட்டுள் ளது.

இந்தத்துறையில் தனியார் சேவையின் அளவுக்கு பொதுப் பயணிகள் பேரூந்து போக்குவரத்து சேவையானது முன்னேற்றமடையவில்லை எனத் தெரிவித்திருக்கும் மத்திய வங்கி, புகையிரத சேவையானது தற்போது மிகக் குறைந்த கட்டணங்களை அறவிடுவதன் மூலம் நட்டத்தினை சந்திப்பதாகவும், சமகாலத்தில் அதிகரித்துச் செல்லும் எரிபொருள் விலைகள் மற்றும் புகையிரத சேவையை இயக்குவதற்கான செலவுகளுக்கேற்ப புகையிரதப் பயணக் கட்டணங்களை மீளமைப்பது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

பழுதடைந்த வீதிகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் காரணமாக பொருட்களை ஏற்றியிறக்குவதற்கான கட்டணங்களில் அதிகரிப்பு ஏற்பட் டுள்ளமையானது நுகர் பொருட்களின் விலைகளிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அரசாங்கம் நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் பொருட்டு, நெடுஞ்சாலை மற்றும் அதிவேக பாதைகளை அமைப்பதற்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் மத்திய வங்கியின் அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளது. (அ-5)

ஓலைச் சுவடிகள் 19

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**கோயிலுக்கு செல்லுமுன் செருப்பைக் கழற்றிப்போடுவது ஏன்?**

புண்ணிய கருமங்கள் எல்லாமே காலணி இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறுவதுண்டு என்றாலும் கோயிலில் நுழையும் போது செருப்பணிதல் ஆகாது என்பது கட்டாயம். சில கோயில்களில் மேற்சட்டை அணிவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் எல்லாக் கோயில்களிலும் செருப்பணிவது கட்டாயமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடைகாரணமாக சிலர் கோயிலுக்கு வெளியில் நின்று வழிபடுவதையும் நாம் காண்கின்றோம்.

கோயில் சுவர்களுக்குட்பட்ட இடம் தெய்வ பூமி என்பதே இந்து மத நம்பிக்கை. இறைவன் வேறெங்கும் நிலை கொள்ளவில்லை என்று இதற்கு அர்த்தம் கொள்ள வேண்டாம். செருப்பைக் களைந்து கோயிலுக்குள் நுழையும் பக்தரின் பாதங்கள் இயல்பாகவே காந்தசக்தியுடைய தரையில் பதிகின்றன. மனிதரின் உடல்நலத்துக்கு உத்தமமானது எனக்கண்டறிந்துள்ள பூமியின் காந்தசக்தி ஒழுக்கு, பாதம் தரையில் பதியும்போது உடலுக்குள் செலுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்ல மூலிகைகளின் மலர்களும் இலைகளும் கலந்த தண்ணீர் விழுந்த பூமியாதலால் கோயிலை சுற்றவுள்ள மண்ணுக்கு மருத்துவ குணங்களும் இருக்கலாம்.

இவையெல்லாம் மனதில் கொண்டே கர்வத்தையும், காலணியையும் களைந்து இறைதரிசனம் செய்யும் போது நவீன சாஸ்திரம் விவரிக்கின்ற மக்னெடிக் தெரபி எனும் காந்த சிகிச்சை நம்முள் நடக்கின்றது.

# அரிசி விடயத்திலும் இராணுவத் தலையீட்டை இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது

## கொழும்பு ஊடகம் சாடல்

(கொழும்பு)

அரிசி விற்பனை விடயத்திலும் அரசாங்கமானது இராணுவத் தலையீட்டை விரும்புகின்றது என்று கொழும்பு ஆங்கில ஊடகமான த நேசன் சாடியுள்ளது.

அந்த ஏட்டில் இது தொடர்பில் இடம்பெற்றுள்ள செய்தி வருமாறு,

அரிசியை கட்டுப்பாட்டு விலையில் விற்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டால் கொழும்பு அரிசி வர்த்தகர்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்க கடையடைப்புச் செய்திருந்தனர்.

கடைகளைத் திறந்து அரிசி வியாபாரம் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன , கடைகள் திறக்கப்படாத பட்சத்தில் இராணுவத்தைக் கொண்டு கடைகளைத் திறக்கப் போவதாக உரிமையாளர்களை அச்சுறுத்தியதாக அறியக் கிடைக்கின்றது.

தொடர்ந்தும் கடைகளை மூடி அரிசியைப் பதுக்கி வியாபாரம் மேற்கொள்ள எத்தனித்தால் நான் இராணுவத்தைக் கொண்டு கடைகளைத் திறந்து அரிசி கிடைக்கச் செய்வேன் என அமைச்சர் எச்சரித்தார்.

தனது அமைச்சின் அதிகாரத்திற்கும் சட்டத்திற்கும் ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப் போவதாகப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளிக்கும் போதே இதனை அவர் கூறியிருந்தார்.

கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்கப்பட வேண்டுமென அரசு அறிவித்திருந்த நிலையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான விற்பனை நிலையங்களில் அரிசி விற்பனையை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் விலைக்கட்டுப்பாட்டு அறிவித்தலைத் தொடர்ந்து தாங்கள் ஏலவே ஏற்பாடு செய்திருந்த அரிசி இறக்குமதிகளையும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அரிசி இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது. அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே தாங்கள் அரிசி இறக்குமதியை மேற்கொண்டதாகவும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலை பற்றிய அறிவிப்பானது தங்களின் நிலையை சங்கடமாக்கியுள்ளதாகவும் வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஈரான் வழங்கிய நிதியில் கிழக்கில் வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

ஈரான் அரசின் நிதி உதவியில் கிழக்கு மாகாணத்தில் புதிய வீடமைப்புத் திட்ட மொன்றை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதற்காக ஈரானிய அரசாங்கம் 1.5 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் ஈரானுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அந்நாட்டு ஜனாதிபதியினால் இந்நிதி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சுனாமி அனர்த்தம் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இம் மூன்று மாவட்டங்களிலும் வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வீடமைப்பு அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## வடக்கு - கிழக்கு மக்களுடன் பேசுவதே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரே வழி

### அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சகல தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே நியாயமான, நேர்மையான, நிலையான தீர்வொன்றை எட்டமுடியுமென அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குலதிலக தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தூதுவர் மேலும் கூறியுள்ளதாவது;

வடக்குக் கிழக்கிலுள்ள மக்களுடன் கலந்துரையாடுவதே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒரே வழியாகும். அத்தகையதொரு சந்தர்ப்பம் தற்பொழுது கிழக்கில் தோன்றியுள்ளது.

அடுத்த மே மாதத்தில் கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்தின் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

அரசாங்கத் தரப்பு, பிரதான எதிர்க்கட்சி, விடுதலைப்புலிகளைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற கட்சிகள், அதிலிருந்து பிரிந்து சென்ற தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற பல கட்சிகளும் இத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இலங்கையின் ஸ்திரத்தன்மைக்காகக் கவனம் செலுத்துகின்ற சர்வதேச சமூகம் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதில் அதன் உதவிகளைத் தாராளமாக வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி அவர்களை வன்முறைக் கலாசாரத்திலிருந்து அகற்ற உதவிக்கரம் நீட்ட வேண்டும் எனவும் தூதுவர் குணதிலக மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## கிழக்கு மாகாணத்தில் 12 தேர்தல் வன்முறைகள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 12 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுக்கும் புளொட் அமைப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களே இறுதித் தேர்தல் வன்முறைச் சம்பவமாகப் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் ஆரயம்பதிப் பகுதியில் திங்கட்கிழமை மாலை புளொட் உறுப்பினர்களுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இதில் புளொட் உறுப்பினர்கள் ஐவர் காயமடைந்துள்ளனர். இதனை விட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட 12 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தபால் மூலம் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்களின் வாக்காளர் அட்டைகளைத் தேர்தல் திணைக்களம் உரிய பொலிஸ் பாதுகாப்புடன் தபால் திணைக்களத்திடம் கடந்த திங்கட்கிழமை கையளித்திருந்தது. (ச-5)

## சுதந்திர தேர்தலுக்கான சூழ்நிலை கிழக்கு மாகாணத்தில் இல்லை

### தேர்தல் கண்காணிப்பு அமைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவிருக்கும் இவ்வேளையில் அங்குள்ள நிலைமையை அவதானிக்கும்போது சுதந்திரமான நியாயமான தேர்தல் ஒன்றை நடத்தக் கூடிய சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என கஃபே எனப்படும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான இயக்கத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான நிமல்க்கா பெர்னாண்டோ கூறியுள்ளார். (ச)

## சர்வதேசப் பிரதிநிதிகள் குழு விலகினாலும்...

கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக இலங்கை வந்த சர்வதேச பிரமுகர்கள் குழுவில் 11 பேர் அங்கம் வகித்தபோதிலும் விசாரணைகளின்போது அவர்களது வரவு 10 வீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது.

சிலர் ஒரு முறையேனும் விசாரணைகளில் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறான ஒரு நிலையிலே அவர்கள் வெளியிட்ட அறிக்கையை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். பொறுப்பை ஏற்றுக் கொண்ட 8 மாதங்களின் பின்னர் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்து நீங்கிக் கொள்வதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

அரசாங்கம் இவர்களுக்கு எந்தவிமான அழுத்தத்தையும் கொடுக்கவில்லை. மனித உரிமைகள் கவுன்சில் கூடும் சந்தர்ப்பம் பார்த்து இக் குழுவினர் அறிக்கை வெளியிட்டிருப்பது எவரதும் நிகழ்ச்சி நிரலின்படி இவர்கள் இயங்குகின்றனரா? என்ற பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்திற்குச் சார்பாக இயங்குவதற்குச் சட்டமா அதிபருக்கு அதிகாரம் உள்ளது. அவரது தலையீடு, குழுவின் செயற்பாடுகளுக்குப் பாதகமாகவுள்ளது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளப்பட முடியாது.

150வருட காலம் பழைமை வாய்ந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகளை அரசாங்கம் எப்போதும் மதித்தே வருகின்றது என்றார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வாவும் கலந்து கொண்டார். (ச-5)

## பரிந்துரைகள் - ஆலோசனைகளை...

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சர்வதேச தரத்திற்கும் நியமங்களுக்கும் அமைவாக இடம்பெறவில்லை. அத்தோடு சாட்சியங்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் அந்தக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

சுதந்திரமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு எந்த இடமும் இல்லை என்று சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக இறுதியறிக்கையில் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் தமது பணிகளிலிருந்து விலகிக் கொள்வதற்கு எடுத்த தீர்மானம், பணிக்காலத்தின்போது தமது அவதானிப்புக்கள் குறித்து தெளிவுபடுத்தும் முகமாக சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு, ஹில்டன் ஹோட்டலில் செய்தியாளர் மாநாட்டை நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

இதில் சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவின் தலைவரான இந்திய உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி.என். பகவதி, குழுவின் உறுப்பினர்களான பிரித்தானியாவைச் சேர்ந்த பேராசிரியர் சேர். நிகல் றொட்ரி, யப்பானைச் சேர்ந்த பேராசிரியர் யோசோ யொக்கோட்டா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பி.என். பகவதி கூறுகையில், இலங்கையின் சட்டங்கள், மற்றும் சட்ட அறிஞர்களுடன் எனக்கு நல்ல பரிச்சயம் உள்ளது. அத்தோடு இந்திய - இலங்கைச் சட்டங்களுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் இல்லை.

எனவே சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவிற்கு இலங்கையில் சட்ட முறைகள் குறித்து போதிய புரிந்துணர்வு இல்லை என்று அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்திக்கும் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை.

நான் இலங்கைக்கு வருவது இது முதல் முறையல்ல. இலங்கைக்கு நான் பல முறை வந்துள்ளேன். எனக்கு சட்டத்துறை சார்ந்த பல நண்பர்கள் இங்குள்ளனர். படுகொலை செய்யப்பட்ட சட்ட அறிஞரான நீலன் திருச்செல்வம் எனது நெருங்கிய நண்பர் ஆவார்.

மாண்புமிக்கோர் குழுவிலுள்ள ஏனைய உறுப்பினர்களும் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் மிக்கவர்கள். நாங்கள் பொதுவாக அடிப்படைச் சட்டம், ஒழுங்கு தொடர்பான ஜனநாயக நாடுகளிலும் குடியரசுகளிலும் நடைமுறையிலுள்ள சட்ட முறைகளின் கீழும் சர்வதேச நியமங்கள் மற்றும் தராதரங்களுக்கு அமைவாகவுமே செயற்பாடுகளை மேற்கொண்டோம்.

நாம் மேற்சொன்ன ஜனநாயக நாடுகளிலும் குடியரசுகளிலும் விசாரணை ஆணைக் குழுவின் செயற்பாட்டில் சட்டமா அதிபர் திணைக்களம் தலையிடுவதில்லை. விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு எந்த இடமும் இருக்காது.

இதுவே சர்வதேச நடைமுறையாகும். சட்டமா அதிபரும் அரசாங்க அதிகாரி ஏனெனில் விசாரணை ஆணைக்குழு சுதந்திரமானது. ஆனால் சட்டமா அதிபர் ஒரு அரசாங்க அதிகாரி ஆவார்.

எனவே அவர் ஆணைக்குழுவின் செயற்பாட்டில் தலையிட முடியாது. பொலிஸ் அதிகாரியைப் போன்று சட்டமா அதிபரும் ஒரு அரசாங்க அதிகாரி என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனினும் இது தொடர்பான எமது பரிந்துரையை ஏற்க மறுத்துள்ள அரசாங்கம் நாட்டில் இடம்பெறும் சகல விசாரணைகளிலும் தலையிடும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு உள்ளதாகக் கூறுகின்றது. ஆனால் அரசாங்கத்தின் இந்த வாதத்தை நாம் ஏற்றுக் கொள்ள வில்லை என்றார். (ச-2,5)

## இலங்கை...

கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அனுசரணையாளர் பணியை இந்தியா முன்னெடுக்க வேண்டுமென இந்திய மற்றும் ஏனைய வெளிவிவகார அமைச்சுக்கள் இந்தியாவுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் தொடர்ந்து தம்மை அனுசரணையாளர்களாக இரண்டு தரப்பினரும் அழைப்பார்கள் என்ற நம்பிக்கையை அண்மையில் நோர்வே வெளியிட்டிருந்தது.

எனினும், இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா அனுசரணையாளர்களாக பணியாற்ற முன்வந்தால் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமென நோர்வே கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## முகமாலை...

புலிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முகமாலை களமுனையில் நேற்றுக் காலை 7.30 மணிக்கு செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் இராணுவத்தின் காலாற் படைகளும் கவசப் படையூர்திகளும் இணைந்து செறிவான ஆட்லறி மோட்டார் எறிகணை மற்றும் கனரக ஆயுதங்களின் சூட்டாதரவுடன் பாரிய முன்னகர்வு நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர். 30 நிமிட நேர தாக்குதலில் படையினரின் ரி-55 ரக போர் டாங்கி ஒன்று விடுதலைப்புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தென்மராட்சி எழுதுமட்டுவாளில் படையினரின் மோட்டார் நிலை மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் அப் பகுதி சேதங்களுக்குள்ளானது என புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.